பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 6.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 12 சனிக்கிழமை (27.12.2003) தொலைபேசி - 2223378 ஒலி 08

ராம்கோ
சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

### எதிரே வந்த ஐஸ்கிறீம் வானுடன் முட்டுண்டு

## பண்ணைக் கடலில் மினி வான் வீழ்ந்தது

## பயணி ஒருவர் பலி; 4 பேர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணைப்பாலத்தில் வந்து கொண்டிருந்த பயணிகள் பஸ், எதிரே வந்த ஐஸ் கிறீம் வானுடன் பக்கப்பாட்டாக முட்டுப்பட்டு தடம் புரண்டு கடலில் வீழ்ந்தது. அதில் பயணம் செய்த வயோதிபப் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் அனலைதீவைச் சேர்ந்த பேரம்பலம் மகாலட்சுமி (வயது63) என்று பெண்மணியே உயிரிழந்தவராவார்.

சம்பவத்தில் அனலைதீவைச் சேர்ந்த கே.நிதர்சன்(வயது 03), கே.யோகராணி(வயது36),எஸ்.செல்லையா (வயது60), வீ.ரோகிணி (வயது 38) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்கள் அனைரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

15பேருடன் ஊர்காவற்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி (10ஆம் பக்கம் பார்க்க)

# ஈரானில் பூகம்பம்

# 10,000 பேர் பலி

## 50ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயம்

(தெகிரான்)

ஈரானின் தென்கிழக்கு மாகாணமான கெர்மானில் நேற்றுக் காலை ஏற்பட்ட பூகம்பத்தினால் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.

மிகப்பாரிய மனிதப் பேரவலத்தை உண்டு பண்ணியிருக்கும் இவ் அனர்த்தத்தால் 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் மீட்புப் பணிகள் தொடரும் நிலையில் கட்டட இடிபாடுகளுக்குள் ஆயிரக்கணக்கானோர் சிக்கியிருக்கலாம் என்று கெர்மான் மாகாண ஆளுநர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

(10ஆம் பக்கம் பார்க்க)





(தெகிரான்)

ஈரானின் தென்கிழக்கு மாகாணமான கெர்மானில் நேற்றுக் காலை ஏற்பட்ட பூகம்பத்தினால் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.

மிகப்பாரிய மனிதப் பேரவலத்தை உண்டு பண்ணியிருக்கும் இவ் அனர்த்தத்தால் 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் மீட்புப் பணிகள் தொடரும் நிலையில் கட்டட இடிபாடுகளுக்குள் ஆயிரக்கணக்கானோர் சிக்கியிருக்கலாம் என்று கெர்மான் மாகாண ஆளுநர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

(10ஆம் பக்கம் பார்க்க)





# ஐ.நா. செயலாளர் பதவிக்கு அமைச்சர் டிரோன் போட்டி

## நியூயோர்க்கில் அறிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா.சபை செயலாளர் பதவிக்கு வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்ணான்டோ போட்டியிடுவார் என்ற உத்தியோக பூர்வ அறிவிப்பை ஆசிய நாடுகளின் ஐ.நா.நிரந்தரப் பிரதிநிதிகள் மத்தியில், ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவர் சார்ளி மகேந்திரன் கடந்த வெள்ளியன்று அறிவித்திருக்கிறார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெற்ற விசேட சந்திப்பொன்றின் போது இதனை அவர் தெரிவித்தார். இச் சந்திப்பில் ஐ.நாவிற்கான ஆசிய நாட்டு நிரந்தரப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீ. மு. கா. முக்கியஸ்தரின் வீட்டின் மீது குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் யாப்புப் பணிப்பாளர் எஸ்.நியாமுதீன் வீட்டின் மீது இனந்தெரியாதோரால் நேற்று அதிகாலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மட்டக்களப்பிற்கு விஜயம் மேற்கொள்வதற்கு ஒரு சில மணி நேரத்திற்கு முன் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் போது எவருக்கும் காயம் ஏற்படவில்லையெனவும் நியாமுதீனின் வீட்டின் ஒருபகுதி சேதமானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இத்தாக்குதலில் கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் வாகனமொன்றும் சேதமடைந்துள்ளது. (ச)

# ஜனவரியில் பிரதமர் இந்தியா பயணம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எதிர்வரும் ஜனவரி மாதம் முற்பகுதியில் இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியா செல்லும் பிரதமர் புதுடில்லியில் உள்ள முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை குறித்து விளக்கிக் கூறுவாரெனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை கடந்த ஒக்டோபர் மாதம் 19-ம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தமை தெரிந்ததே. (தி-61,10)

# இந்திர டி சில்வா-தயாசந்தகிரி சந்தித்து கலந்துரையாடினர்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா கடற்படைத் தளபதி வைஸ அட்மிரல் தயா சந்தகிரியைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

புதிதாக பதவியேற்றுள்ள பொலிஸ்மா அதிபர் நேற்று கடற்படைத் தலைமையகத்திற்குச் சென்று கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

புதிய பொலிஸ்மா அதிபருக்கு கடற்படையினரால் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

இச் சந்திப்பை நினைவு கூரும் வகையில் இருவரும் நினைவுச் சின்னங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

(இ-10-61)

# கடலுக்குச் சென்ற குருநகர் மீனவர் நால்வரைக் காணவில்லை

## அநாதரவான நிலையில் படகு மீட்பு

(யாழ்ப்பாணம்)

தொழிலுக்காகச் சென்ற மீனவர்கள் கரைதிரும்பாத நிலையில் அவர்கள் பயணம் செய்த படகு மட்டும் நடுக்கடலில் மீட்கப்பட்ட சம்பவத்தால் குருநகர் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 23ம் திகதி குருநகர் இறங்குதுறையில் இருந்து மன்னார் இரணைதீவு கடற்பகுதியில் மீன் பிடிப்பதற்காகச் சென்ற குருநகரைச் சேர்ந்த க.ஜெம்மார்(வயது35), எஸ்.ரவி(வயது45), எஸ்.உதயகுமார் (வயது37),பெ.ரஞ்சித்(வயது 35) ஆகிய நான்கு மீனவர்களும் நேற்று வரை கரைதிரும்பவில்லை.

ஆனால் அவர்கள் பயணம் செய்த படகு மாத்திரம் இரணைதீவுக் கடற்பகுதியில் ஆட்கள் இன்றி அநாதரவாக இயந்திரம் பழுதடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்

(10ஆம் பக்கம் பார்க்க)

**எயிட்ஸினால் பாதிக்கப்பட்டோரை ஒதுக்காது, சமூகத்தில் ஒருவராக ஏற்று பரிவுடன்நடத்தல் வேண்டும்.**

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடக்கு கிழக்கு புனரமைப்புக்கு உலக வங்கி தொடர்ந்தும் உதவி

## பீற்றர் ஹரோஸ் உறுதி

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண புனா வாழ்வு நடவடிக்கைகளுக்கு உலக வங்கி தொடர்ந்தும் உதவி வழங்கும் என உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோஸ் உறுதியளித்துள்ளார்.

புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவை அண்மையில் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

மேலும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் போரினால் சேதமடைந்துள்ள வீடுகளைப் புனரமைப்பதற்கான நிதியுதவியை வழங்கும் நோக்கில் சர்வதேச அபிவிருத்தி சங்க அதிகாரிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கை வரவுள்ளனர்.

இதுதவிர இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவதற்காக உலக வங்கி ஒரு கோடிரூபா நிதியை வழங்கியுள்ளது.

அதற்கமைய அதன் ஒருங்கிணைக்கப்பட்ட உதவித் திட்டத்தின் ஊடாக இடம் பெயர்ந்த 35 ஆயிரம் பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா விநியோகிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய உதவிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றார். (தி.60.10)

# யாழ்.கல்வியியல் கல்லூரியில் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசியற் கல்வியியல் கல்லூரியில் முதற் தடவையாக ஆங்கில ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறிகள் அடுத்தவருடம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி. கமலநாதன் தெரிவித்துள்ளார்.

இக் கற்கை நெறிக்காக யாழ். குடாநாட்டில் இருந்து 450 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இவர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் 11ம் திகதி யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முதலில் இவ் தெரிவுப்பரீட்சை கொழும்பில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பீடாதிபதி தி. கமலநாதன் எடுத்து வந்த முயற்சிகளின் பயனாகவே இத் தெரிவுப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் முதற் தடவையாக நடாத்தப்படவுள்ளது.

இவ் டிப்ளோமா கற்கை நெறிகள் யாழ்ப்பாணம் மற்றும் களுத்துறை ஆகிய இரு இடங்களில் உள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகளில் மாத்திரம் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-16)

# மாவட்ட ரீதியில் இடமாற்றம்பெற்ற ஆசிரியர்களின் பெயர் விபரம்

(யாழ்ப்பாணம்)

மாகாணக் கல்வித் திணைக்கள இடமாற்ற சபையின் தீர்மானத்திற்கமைவாக மாவட்டங்களுக்கிடையில் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து தமது கடமைகளை மேற்கொள்வர்.

இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களினதும் அவர்கள் இடமாற்றம் பெறும் கல்வி வலயமும் வருமாறு

**வவுனியா தெற்கு**

க.கோமளா(கோப்பாய் ம.வித்தி.), வை.பங்கையற் செல்வி (இணுவில் இந்துக் கல்லூரி), திருமதி க.காருகபத்தியம் (கிளிநொச்சி இராமநாதபுரம் அ.ந்.க.),

**முல்லைத்தீவு**

மு.இராஜேஸ்வரி(கொடிகாம் அ.த.க.பா.),ஐ.குணசீலன்(கிளி.கரவெட்டித் திடல் நாகேஸ்வரா வித்தி.), திருமதி நே.பரிமளாதேவி(வவு. சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

**கற்குடா**

பி.அசம்ரா தமிழ்ச்செல்வி(நல்லூர் ஸ்தான சி.சி.த.பா)

திருகோணமலை

மு.கடம்பநாதன் (வேலாயுதம் ம.வித்தி)

**கிளிநொச்சி**

திருமதிம.கமலகுமாரி(யா.மட்டுவில் வடக்கு அ.த.க.பா),திருமதி சி.சுலோசனா (வவு.முஸ்லிம் மா.வித்தி.), திருமதி செ.சசிகலா (வவு.நெளுக்குளம் கலைமகள் ம.வித்தி),

**மன்னார்.**

க.மதிவதனி(முத்தயன்கட்டு வலது கரை அ.த.க.பா) அருட் சகோதரி சிரேஸ் நொய்லின் (திரு. புனித அந்தோனியார் வித்தி.)

**யாழ்ப்பாணம்.**

வா.கனேஸ்வரன் ((முல்.வள்ளிபுனம் க.வித்தி),க.சேயோன் (மல்லாவி மத்திய கல்லூரி), க.ஜெயந்தன்(மல்லாவி மத்திய கல்லூரி) ந.சந்திரராசா (புளியங்குளம் இந்துக் கல்லூரி), திருமதி க.பிரதாஜினி (செட்டிகுளம் மகா வித்தி.) திருமதி ஈ.சந்திரா (பூவரசம்குளம் ம.வித்தி.) சி.கோபால கிருஷ்ணன்(வவுனியா தமிழ் ம.ம. வித்தி) வ.விஜயேந்திரன் (வவுனியா தமிழ் ம.ம.வித்தி) திருமதி வ.பிரபாலினி(வவுனியா தமிழ் ம.ம.வித்தி) திருமதி பா.கமலோதயம் (இறம்பைக்குளம் மகளிர் ம.வித்தி.) க.ஞானசம்பந்தன்( மூன்று முறிப்பு அ.த.க.பா.) திருமதி பா.கௌரி (திரு.செல்வநாயகபுரம் இ.ம.வித்தி.),

**வடமராட்சி**

திருமதி அ.தேவகி(முல்.கற்சிலைமடு அ.த.க) திருமதி த.ஜெயகௌரி (முல்.துணுக்காய் அ.த.க.பா) திருமதி ந.சித்திராதேவி(முல். துணுக்காய் அ.த.க.பா),

**தீவகம்**

பா.லோகேஸ்வரன் (மல்லாவி மத்திய கல்லூரி),கு.வசந்தகுமார்(வவு. சைவப்பிரகாச மகளிர் கல்லூரி).

**தென்மராட்சி**

திருமதி ஸ்ரீ.பவானி(முல்.யோகபுரம் ம.வித்தி.) திருமதி ப.ஸ்ரீராம் (வவு.நெடுங்குளம் கலைமகள் ம.வித்தி.) திருமதி உ.கயல்விழி (திரு.செல்வநாயகபுரம் இ.ம.வித்தி.)

**வலிகாமம்**

அ.இந்திராதேவி (வவு.முரகநூர் சாரதா வித்தி.) (ச)

# காணாமல் போனோர் சங்க பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களின் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை இம் மாதம் 31ம் திகதி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இதேவேளை காணாமல் போனவர்கள் பெயர் விபரங்கள், முகவரிகள் காணாமல் போன திகதிகள், தொழில் மற்றும் விசாரணைகள் மேற்கொண்ட திகதிகள் போன்ற விபரங்களை அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதியின் சிரேஷ்ட செயலாளர், பாதுகாவலர் சங்கச் செயலாளரை கடிதம் மூலம் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# குடாநாட்டு சுழற்சிமுறைக் கடனுக்கு யு.என்.எச்.சி.ஆர்.நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் பாதிப்படைந்தவர்களுக்கு சுழற்சி முறைக் கடனுதவிகளை வழங்குவதற்கென யு.என். எச்.சி.ஆர் நிறுவனம் 567 இலட்சத்து 37 ஆயிரத்து 251 ரூபா நிதியை வழங்கியுள்ளது.

யாழ்.குடாநாட்டிலுள்ள 16 பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் 548 இலட்சத்து 22 ஆயிரத்து 501 ரூபா நிதிவழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கமத்தொழில் சேவைத் திணைக்களத்திற்கு 9 இலட்சத்து 18 ஆயிரத்து 250 ரூபா நிதியும் கூட்டுறவு திணைக்களத்திற்கு 9 இலட்சத்து 95 ஆயிரத்து 800 ரூபா நிதியும் வழங்கப்பட்டுள்ளன.

இந் நிதியைப் பயன்படுத்தி யாழ்ப்பாணம், நல்லூர், காரைநகர், ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, வேலணை, சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை, உடுவில், தெல்லிப்பழை பருத்தித்துறை, மருதங்கேணி, பளை, கரவெட்டி, கோப்பாய், நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள கிராமிய மட்ட அமைப்புக்கள் மூலம் சுழற்சி முறையில் வழங்கப்படவுள்ளன.

மேற்படி பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள கிராமிய மட்ட அமைப்புக்களூடாக இளம் விதவைகள், மீனவர்கள், விவசாயிகள் மற்றும் உடல் ஊனமுற்றோர் போன்றோருக்கு சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு இந்நிதிமூலம் சுழற்சிமுறை கடனுதவிகள் வழங்கப்படவுள்ளன.

அதேவேளை யாழ்.குடாநாட்டிலுள்ள மேற்படி தரப்பினருக்கு சிறுதொழில் முயற்சிக்காக 548 இலட்சத்து 22 ஆயிரத்து 501 ரூபா நிதி சுழற்சி முறையில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது (தி.16)

# வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவருக்கு பிணை அனுமதி

(கொழும்பு)

விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் முன்னாள் தலைவர் சுசந்த பெர்னாண்டோ நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் தலைவராக இருந்த காலப்பகுதியில் 300இலட்சம் ரூபா பணம் மோசடி செய்ததாக அவர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் வைத்தியசாலையில் இருந்து அம்புலன்ஸ் வண்டி மூலம் கொழும்பு பிரதான நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட இவரை 30ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணையிலும் மேலதிக நீதிவான் ரஞ்சன் திஸாநாயக்கா விடுதலை செய்தார்.

இதேவேளை சந்தேக நபர் மீதான வழக்கை லஞ்ச ஊழல் சட்டத்திற்கு அமைவாக மேற்கொள்ளுமாறும் அவர் பணித்துள்ளார். (த)

## தங்க ஆபரணம் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை வளவினுள் கடந்த செவ்வாய்க் கிழமை தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளம் காட்டிப்பெற்றுக் கொள்ளலாம். (தி)

## நன்னீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசமூக நிலையம் அவ்வூர் மக்களின் நலன் கருதி குடிநீர்க்குழாய் மூலம் நன்னீர் விநியோகம் செய்து வருகிறது. (தி-36)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமாதான செயற்பாடு, சகவாழ்வும் பெண்கள் பங்களிப்பும் என்னும் தொனிப் பொருளில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினதும் பவ்ரல் அமைப்பினதும் ஏற்பாட்டில் இடம்பெறும் இக் கருத்தரங்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

இக் கலந்துரையாடலில் பெண்கள் மனிதவுரிமைகள் இணைப்பாளர் மாலினி திசாநாயக்கா கலந்து கொள்ளவுள்ளார். (த-4)

## அதிபர் தினவிழா

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்க அதிபர் தினவிழா இன்று சனிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வின் கல்லூரியின் முன்னாள் சிரேஷ்ட மாணவர் தலைவர்களான எஸ்.அருணாசலம் திரு.ப.பத்மகரன் செல்வி சி.கிருத்திகா ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர் (தி.79)

## சூரன்போர்

(கோப்பாய்)

கோப்பாய் வெள்ளொருவை விநாயக ஆலய கயமுக சூரன் போர் உற்சவம் இன்று சனிக்கிழமை இரவு 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (தி.79)


### நல்லூர் பிரதேச சபை ஆதனவரி அறிவித்தல் 2003/நல்லூர்/கொக்குவில் உப-அலுவலகங்கள்

**2003ம் ஆண்டு 4ம் கந்தாயத்திற்கான ஆதன வரியை 31.12.2003ம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக எதுவித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக கீழ் விபரப்படி தண்டப் பணம் அறவிடப்படும்.**

வெற்றுக் காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள்... 15%
ஏனைய காணிகள், கட்டிடங்கள் ... 20%

**நிலுவை உட்பட 2003ம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் 1987ம் ஆண்டில் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல. 134(5)இன் படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.**

### நல்லூர் பிரதேச சபை நல்லூர்/கொக்குவில் உப-அலுவலகங்கள் ஆதனவரி அறிவித்தல்-2004

**1987ம் ஆண்டில் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல. 15இன் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக ஆதன வரி அறவீடு நடப்பு வருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2004ம் ஆண்டும் அறவீடு செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2004 ஆண்டிற்கான ஆதன வரியை 31.01.2004ம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு அவ் வருட மொத்த வரியில் 10%கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரியை அந்தந்த கந்தாயத்தில் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டிற்கான வரியில் 5%கழிவு வழங்கப்படும்.**

**குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியை செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15%மும் ஏனைய ஆதனங்களுக்கு 20%மும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31.01.2004ம் திகதிக்கு முன்பாக அந்தந்த அலுவலகங்களில் வரிகளை முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.**

பிரதேச சபை,
நல்லூர்.
24.12.2003. (C/7065)

திருமதி பு. சிவலிங்கம்
செயலாளருக்காக

## இன்று ஒரு தகவல்

# சூதாட்டம்

ஒருவர் குதிரை பந்தயத்திற்குச் சென்றார். பணம் செலுத்தினார். தோற்றுப் போனார். மறுபடியும் சென்றார். பணம் செலுத்தினார் தோற்றுப் போனார். அடுத்த 'முறையும் பணம் செலுத்தச் சென்றபோது அவரைத் தடுத்துக்கேட்டேன். " ஏன் சார் ஏற்கனவே செலவு செய்து தோற்றது போதாதா இன்னும் தோற்கப் போகின்றீர்களா?" என்றேன்.

"விட்டதையெல்லாம் மொத்தமாக எடுக்க வேண்டாமா சார் அதற்காகத்தான் தொடர்ந்து பணம் கட்டுகிறேன் சார்" என்கிறார். இவரைத் திருத்துவது கடினம். இது ஒரு மன நோய்.

மன நோய்களில் பல வகை உண்டு. மன நோய்கள் பிரிவு அட்டவணையில் சூதாட்டம் என்பது அவ்றியுறும் நோய் என கூறப்பட்டு வருகின்றது. சூதாட்டம் 2வகைப்படும் என்று கூறுகின்றனர் உளவியல் நிபுணர்கள். ஒரு வகை எப்படியென்றால் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு மகிழ்ச்சியும், கிளர்ச்சியும் அடைவதற்காக ஈடுபடுவது பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஒரு ஆர்வம்.

கேளிக்கைக்காக கொஞ்சம் விட்டுப்பிடிப்பது என்ற மனிதனுடைய அடிமனதில் உள்ள விபரீத பிணையச் சுபாவம் போன்றவை இதற்குக் காரணம்.

இன்னொருவகை எப்படியென்றால் சூதாட்டத்தில் ஈடுபட்டு ஒரு கட்டாய நிலைக்கு ஆளாவது, செய். ஈடுபடு என்று மனது ஒரு வெறித்தன்மையைத் தூண்டிக்கொண்டிருக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு நாம் தோற்றுக் கொண்டிருக்கின்றோம் என்று தெரியும். நாம் ஜெயிப்பதற்கான சந்தர்ப்பம் இல்லை என்பதும் தெரியும். இதனால் நமக்கும் கஷ்டம். நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும் கஷ்டம் என்று தெரியும்.

அப்படியிருந்தும் சூதாடுவார்கள். இதற்குக் காரணம் சூதாடியின் பகற்கனவு என்கின்றனர் நிபுணர்கள். இந்த நிலைமைக்கு கட்டாய சூதாட்டம் அல்லது நிர்ப்பந்தம் சூதாட்டம் என்று பெயர். இப்படிப்பட்ட ஆசாமி இருப்பது முழுவதையும் விட்டு விடுவான். கடன் வாங்குவான், திருடுவான் இருந்தாலும் என்றாவது ஒரு நாள் ஜெயிப்பேன் என கூறுவான். விட்டதை எடுத்து விடுவேன் என்ற நம்பிக்கைச் சுடர் இவனுள்ளே எரிந்து கொண்டிருக்கும். இவனை மனநோயாளி என்று கூற முடியாது. ஏனென்றால் இவர்களிடம் மனப் போராட்டமோ கவலையோ, பதட்டமோ இருப்பதில்லை.

சில விசேடமான குணங்கள் இவர்களிடம் உண்டு. எதிர்ப்புணர்ச்சி, சிறு பிள்ளைத்தனம், சட்டதிட்டங்களையும் சம்பிரதாயங்களையும் உடைத்தெறியாத மனப்போக்கு, பொறுப்பற்றதன்மை, நெறிதவறி நடப்பது ஆகிய எல்லாம் இவர்களிடம் உண்டு. ஆனால் வெளிப்பார்வைக்கு சினேகமாகவும் அன்பாகவும் காட்டிக்கொள்வார்கள். ஆதாயம் சுயலாபம் கருதியே பழகுவார்கள்.

இவர்கள் கேட்கும் போது நாம் பணம் கொடுக்க்வில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். நம்மைக் கைவிட்டு விடுவார்கள். நம்மீது அபாண்டமாகப் பழிசுமத்தவும் தயங்கமாட்டார்கள். தமது சூதாட்ட நடவடிக்கைகளுக்குச் சாதகமாக காரணங்களைக் கூறிக்கொண்டிருப்பார்கள். " நீ வேண்டும் என்றால் பார் ஒரேநாளில் நான் இழந்ததையெல்லாம் மீட்டு லட்சாதிபதியாகின்றேனா இல்லையா பார் " என்பார்கள்.

தோற்றுப்போவதை ஒரு படிப்பினையாக இவர்கள் எடுத்துக்கொள்வதே இல்லை. தோற்றுப் போவதிலும் இவர்களுக்கோர் அலாதியான சுகம். தனக்குத்தானே துன்பத்தை வரவழைத்துக் கொண்டு இன்பம் அடைவதற்கு தன்வதை சுகம் என்று பெயர். இவர்கள் அந்தரகம்.

சிலர் எப்படித்தெரியுமா மந்திர எண்ணங்களை வரவழைத்துக் கொள்வது சூதாடுவதற்காக அலுவலகத்தில் கையாடல் செய்வது, திருடுவது இந்த மந்திர எண்ணம் தீவிரமானால் ஒரு மாதிரிப் பேச ஆரம்பித்து விடுவார்கள். " தோல்விதான் வெற்றிக்கு முதல் படி" என்பார்கள்.

சில சூதாடிகளை ஆராய்ந்து பார்த்ததில் என்ன தெரிய வந்தது தெரியுமா? அவர்கள் குழந்தைப் பருவத்தில் அன்புக்காக ஏங்கியவர்கள். புறக்கணிக்கப்பட்டவர்கள். உதவிகளைப் பெறமுடியாதவர்கள். இப்படி இருந்துள்ளார்கள். இவர்கள் வளர வளர மற்றவர்கள் நலன் பற்றி அக்கறையில்லாதவர்களாகி விடுவார்கள். அதிர்ஷ்ட தேவதை தன்னுடன் இருப்பதாக அசையாத நம்பிக்கை இவர்களுக்கு. இவர்களைத் திருத்துவது மிகவும் கஷ்டம் அதனால் பந்தயம், சூதாட்டம் போன்ற விஷயங்களிலிருந்து விலகியிருப்பதுதான் நமக்கு நல்லது.

ஒரு ஆள் கூறினான் " என் குதிரை வேகமாக ஓடுவதற்கு என்ன வழி? என்று கால்நடை மருத்துவரிடம் கேட்டேன். அவர் ஒரு பை நிறைய மருந்துகளைக் கொடுத்து தினமும் இரண்டு மாத்திரை வீதம் கொடுக்கச் சொன்னார். முதல் நாள் இரண்டு மாத்திரை கொடுத்துவிட்டு அதன் மீது ஏறி அமரச் சென்றேன். அதற்குள்ளே அது அம்புபோல் பாய்ந்து ஓடியது!" என்றான். "அடடா பின்பு நீங்கள் என்ன செய்தீர்கள்? "என்று கேட்டேன். "மீதி மாத்திரைகளை நான் விழுங்கிவிட்டு அதைத் துரத்திப் பிடித்தேன்" என்றான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# அரசின் பொருளாதாரத் தடையை நீக்கியவர்கள் விவசாயிகளே

## பாராட்டு விழாவில் தங்கன் உரை

(மருதங்கேணி)

கடந்த 20 வருடங்களாக கொடிய யுத்தத்திற்கு முகம் கொடுத்து, இக் காலப்பகுதியில் தேசத்தினுடைய அனைத்து நடவடிக்கைகளுக்கும். முன்நின்று தேவைகளை கருத்திற்கொண்டு காலநேரம் பாராது உழைத்த பெருமை விவசாயப் பெருமக்களையே சாரும என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட சிறந்த விவசாயிகள், சிறந்த கால்நடைப் பணையாளர்களை கௌரவிக்கும நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவிக்கையில்,

காலத்திற்குக் காலம் போராட்டத்தினுடைய பல சுமைகளைத் தாங்கிய விவசாயப் பெருமக்கள் இந்த விடுதலைப் போராட்டத்தை எமது தலைவர் முன்னெடுத்துச் செல்ல உழைத்த பெரும் சக்தி என்றே நாம் கருதவேண்டும்.

இந்நிகழ்வானது உண்மையில் எமது தேசியத் தலைவருடைய நீண்டநோக்க சிந்தனை உருவாக்கம் என்றே 1990ஆம் ஆண்டு எமது பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் சிறந்த விவசாயிகளையும் கால்நடை உற்பத்தியாளர்களையும் இனங்கண்டு அவர்களையும் அவர்கள் சார்ந்த சமூகங்களின் வளத்தை மேம்பாடடையச் செய்வதற்காக இந்நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த விடுதலைப் போராட்டத்தின் பெரும் பங்கினை விவசாயப் பெருமக்கள் கொண்டிருக்கிறார்கள் என்பதனை யாரும் மறந்து விடவோ, மறுத்துவிடவோ முடியாது.

அரசாங்கத்தினுடைய திட்டமிட்ட பல இராணுவத் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்த அதேவேளை, பாரிய பொருளாதாரத் தடைகளுக்கும் முகம் கொடுத்திருக்கிறோம்.

அரசினது பொருளாதாரத் தடைகளை உடைத்தெறிந்த பெருமை விவசாயிகளையே சாரும். இந்த விடுதலைப் போராட்டம் விவசாயிகளையே என்றென்றும் நம்பியுள்ளது.

தமிழீழத்தைப் பெருமையோடு வளர்த்துச் செல்கின்ற பணிக்காக, இத்துறைசார்ந்த அனைவரும் ஒன்றிணைந்து உழைக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (தி-35)

## இராசிபலன்

**27. 12. 2003**

**(மார்கழி 12, சனிக்கிழமை)**

**சதுர்த்தி முற்பகல் 09.08 மணிவரை**

**அவிட்டம் முன்னிரவு 10.58மணிவரை**

**இராகுகாலம் 09.27-10.57 வரை**

**சுபநேரம் 6.27-7.57வரை**

**சித்தாமிர்தம்**

**மேடம்**

எடுத்த காரியம் கைகூடும், தொழில் லாபம், மன மகிழ்ச்சி, நல்ல வரவேற்பு.

**இடபம்**

தூரதேசச் செய்தி, லட்சுமிகரம், உற்சாகம், மேன்மை.

**மிதுனம்**

கட்டுப்பாடு, அபகீர்த்தி, எடுத்த காரியம் தாமதம், உடல் நலக் குறைவு.

**கடகம்**

வீண் பிரச்சினை, பிரயாண பயம், புத்தி சாதூரியம், எதிர்பாராத நன்மை.

**சிங்கம**

செல்வாக்கு, முயற்சி கைகூடும், குடும்ப நன்மை, பொருள் சேர்க்கை.

**கன்னி**

சத்துரு ஜெயம், செய்தொழிலில் விருத்தி, காரிய நன்மை, உடல் நலம்.

**துலாம்**

வியாபார நன்மை, உறவினர் சந்திப்பு, தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**

மனச் சோர்வு, மாதா சுகம், காரிய தாமதம், புதிய விடயம்.

**தனுசு**

காரிய ஜெயம், கூட்டு முயற்சி, போசன நன்மை, உஷ்ணநிலை.

**மகரம்**

அதிக வார்த்தை, திடீர் நன்மை, முயற்சி தாமதம், பிரயாணம்.

**கும்பம்**

சயன சுகம், கௌரவமான நிலை, தெய்வ சிந்தை, காரிய அனுகூலம்.

**மீனம்**

காரிய தாமதம், உணர்ச்சிவசப்படுதல், சயனசுகக் குறைவு, தொழிற் சிந்தை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன்

## கரையோரப்பிரதேசங்கள் விஸ்தரிப்பு

(திருநெல்வேலி)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், எதிர்வரும் 2004 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வடக்கு-கிழக்கு கரையோரப் பகுதியின் சமூக அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள் குறித்து ஆய்வொன்று நடாத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி இடம்பெறவுள்ள இவ் ஆய்வில், வட பகுதியின் ஏனைய பிரதேசங்களையும் உள்ளடக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு கரையோர பகுதிகளுக்கான சமூக அபிவிருத்திப் பணிகளை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட இருந்த இத்திட்டத்துக்கு முதலில் நெக்டெப் எனப் பெயரிடப்பட்டிருந்தது.

ஆனால், தற்போது யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டத்திற்கு 'நெக்டெப்' எனப் பெயரிடப்பட்டுள்ளதுடன், இத்திட்டமானது வடபகுதியெங்கும் விரிவுபடுத்தி முன்னெடுக்கப்படவுள்ளது.

அபிவிருத்தியை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இத்திட்டமானது, 28.4 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் எதிர்வரும் 2004 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் முதல் 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 20 மில்லியன் டொலரையும், இலங்கை அரசாங்கம் 5.6 மில்லியன் டொலரையும், நெதர்லாந்து அரசு 1.5 மில்லியன் டொலரையும் வழங்க முன்வந்துள்ளதுடன், இதைவிட இத்திடடத்தால நன்மை பெறுபவர்தரப்பிலிருந்து 1.3 மில்லியன் டொலரும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் முதற்கட்டமாக கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய கரையோர சமூக அபிவிருத்திகளில் திருமலைக்குடா, மட்டக்களப்பு ஏரி, அம்பாறைப் பகுதி சூழலியல் தொடர்பான திட்டங்கள் என்பவற்றில் மேற்கொள்ளப்படவேண்டும் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம் உட்பட வடபகுதியின் கரையோர சமூக அபிவிருத்தி தொடர்பான திட்ட அபிவிருத்தி ஆய்வுகள் அடுத்த ஆண்டு முற்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இச்செயற்திட்ட ஆய்வின் பெறுபேற்றின் அடிப்படையிலேயே ஏனைய இடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தயாரிக்கப்படும் என நெக்டெப் திட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (தி-43,35)

# 3 நாள் தேசிய நடன விழா நேற்று கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

3 நாள் தேசிய நடனவிழா நேற்று கொழும்பில் ஆரம்பமாகியது. கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் ஆரம்பமாகி நடைபெற்றுவரும் இம் 3 நாள் நடன விழாவில் நாடெங்கிலும் இருந்து சுமார் 6 ஆயிரம் இளம் நடனக்கலைஞர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நடன விழாவையொட்டி கருத்தரங்குகள் விசாகா வித்தியாலயம், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயம், இசைப்பத்தன வித்தியாலயம். டி.எஸ். சேனநாயக வித்தியாலயம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளன.

நாடெங்கிலும் உள்ள இளம் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணருவதற்காகவே இம் 3 நாள் நடன விழா நடைபெறவுள்ளதாக கலாசார அமைச்சின் செயலாளர் கே.கே.டபிள்யூ. திலகசிறி தெரிவித்துள்ளார். (வ)

# கோட்டையடி மக்கள் மலசலகூடமின்றி அவதி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு கோட்டையடிக் கிராமத்தில் போதிய மலசலகூட வசதி இன்றி பொது மக்கள் அவஸ்த்தைப்படுகின்றனர்.

இவ்வருட ஆரம்பத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்த போது அமைத்துக் கொடுக்கப்பட்ட தற்காலிக 6 மலசலகூடங்களை குடியிருப்பில் உள்ள '214 பேரும் பாவித்து வருகின்றனர்.

இதனால் குறிப்பிட்ட 6 மலசலகூடங்களையும் குடியிருப்பில் வாழும் 112 பெண்கள் மட்டும் பாவித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பொதுமக்கள் பெரும் அதிருப்தி வெளியிட்டுள்ளதுடன், பொது அமைப்புக்கள் மலசலகூட வசதியை ஏற்படுத்தித்தர முன்வரவேண்டும் எனவும் கோரி வருகின்றனர். (தி-75)

# புகைப்படத் துறையில் ஒரு பெண்ணின் சாதனை


பண்டைய காலம் தொட்டு கலைகளில் சிறந்து விளங்கிவருவதும், தமிழர்கள் செறிந்து வாழ்வதுமான யாழ். குடாநாட்டில் பல துறைகளிலும் பெண்கள் முன்னேற்றம் அடைந்து வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டு இருக்கின்றனர்.

இதன் ஓர் அங்கமாக, தனித்து நின்று ஓர் பெண்ணால் எதையும் சாதிக்க முடியும் என்பதனை வெளியுலகுக்குத் தெரியப்படுத்தியும், தன்னை மென்மேலும் விரிவுபடுத்திக் கொண்டு புகைப்படத் துறையில் புதிய பல சாதனைகளை நிலைநாட்டிக்கொண்டிருக்கும் பெண்மணி ஒருவரை அண்மையில் சந்தித்தோம்.

அவர்தான் திருமதி மீரா ஸ்ரீஸ் கந்தராஜா. போட்டோ ஸ்ரீ ஸ்ருடியோ அன் வீடியோ படப்பிடிப்பு நிறுவனத்தின் உரிமையாளர். கோண்டாவிலில அமைந்துள்ள தனது வீட்டைப் புகைப்படக் கலையகமாக மாற்றி அமைத்து, புகைப்படத்துறையில் தனித்து ஈடுபட்டு வளர்ச்சி அடைந்து வரும் இவர் இரு பிள்ளைகளின் தாயார். குரும்பசிட்டி பொன். பரமானந்த மகாவித்தியாலயத்தின் பழைய மாணவி.

புகைப்படத் துறையில் பல சாதனைகளைச் செய்துவரும் திருமதி மீரா ஸ்ரீஸ்கந்தராஜாவை எமது வலம்புரியினூடாக வெளியுலகுக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்ற நன்நோக்கத்தோடு அவரைச் சந்திப்பதற்காக நாம் சென்றோம். அவரது வீடு ஓர் தனித்தன்மையுடன் சிறந்த கலையகமாகத் தோற்றமளித்தது.

கலையக வாசலில் நுழையும் போதே அதன் சுற்றுப்புறத்தை ஒரு முறை நோட்டமிட்டபோது, பார்க்கும் இடம் எங்கும் ஒரே பூஞ்சோலை மயம், தண்ணீர்த் தடாகம் ஒரு புறம், செயற்கை மலைகள் அவற்றில் இருந்து உருவாகும் அழகிய நீர் வீழ்ச்சி மறுபுறம். இதைவிட, இன்னும் பற்பல அம்சங்கள் அனைத்தும் கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய வகையில் மிகவும் ரம்மியமாக உன்னதமாகக் காணப்பட்டன.



எம்மை வாசலில் கண்டதுமே இன்முகத்துடன் வரவேற்று உபசரித்த திருமதி மீரா ஸ்ரீஸ் கந்தராஜாவிடம் புகைப் படத்துறையில் அவரது அனுபவத்தையும், அவை சார்ந்த விடயங்களையும் அறிந்துகொள்ளும் ஆவலுடன் அவரிடம் சில கேள்விகளைத் தொடுத்தோம்.

கேள்வி:- புகைப்படத் துறையில் உங்களுக்கு ஆர்வம் வந்தது எப்போது? ஆர்வம் ஏற்படுவதற்கான காரணம் என்ன?

***பதில்:- கடந்த 1982ஆம் ஆண்டு காலப்பகுதியில் எனக்குப் புகைப்படத் துறையில் ஆர்வம் ஏற்பட்டது. மேற்படி காலப்பகுதியில் இடம்பெற்ற எனது திருமணத்தின் பின்னர், கணவரது தொழிலான இப்புகைப்படத் துறையைக் கற்றுக் கொள்ளவேண்டும் என விரும்பினேன்.***



கேள்வி:- உங்கள் கணவரின் புகைப்படத் தொழிலில் நீங்கள் எவ்வாறு உதவியாகவும் உறுதுணையாகவும் இருந்து வந்தீர்கள்?

***பதில்:- எனது கணவர் படப்பிடிப்புக்காக வெளியிடங்களுக்குச் செல்லும்போது அவருக்கு உதவியாகக் கூடவே நானும் சென்றிருக்கிறேன். ஏற்கனவே, ஒப்பனைக் கலையில் நான் தேர்ச்சி பெற்றிருந்தேன். இவ் ஒப்பனைக் கலையைப் புகைப்படக் கலையுடன் இணைத்துச் செய்வதற்கும் அவருக்கு ஒத்தாசையாக இருந்து வந்துள்ளேன். அத்துடன், கணவருக்கு உதவியாக இன்னொருவரை அமர்த்தி அவருக்கு வழங்கும் சம்பளத்தை எனது சேவையின்மூலம் மிச்சப்படுத்திக் கணவருக்கு பக்க பலமாக இருந்து வந்துள்ளேன்.***

கேள்வி:- நீங்கள் இத்தொழிலை தனித்துநின்று செய்ய ஆரம்பித்தது எப்போது?

***பதில்:- எனது கணவரின் இறப்புக்குப் பின்னர்.***

கேள்வி:- தனித்து ஓர் பெண்ணாக நீங்கள் புகைப்படத்துறையில் ஈடுபடும்போது உங்கள் அனுபவம் எப்படி இருந்தது?

***பதில்:- கணவருடன் இணைந்து தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருந்தமையால் நான் இதைத் தனித்துச் செய்யும்போது பெரிய பிரச்சினைகளை எதிர்கொள்ளவில்லை. இதில் எனக்கிருந்த ஆர்வமும் அனுபவமும் தொடர்ந்தும் தொழிலைச் செய்வதற்கு உறுதுணையாக இருந்தன.***

கேள்வி:- நீங்கள் இத்தொழிலைச் சுமார் 20 வருடகாலமாகச் செய்து வருகிறீர்கள். நீங்கள் தொழிலை ஆரம்பித்த காலகட்டத்திலும் பார்க்க தற்போதைய காலகட்டத்தில் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளீர்கள்.

***பதில்:- ஆரம்ப காலகட்டத்தில் சாதாரணமாகப் புகைப்படங்களை எடுத்துவந்தேன். ஆனால், தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்துவரும் தற் போதைய காலகட்டத்தில் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன் படுத்தி திறமையாகச் செயற்பட்டு வருகிறேன்.***

***இதனால், சமகால தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் என்னால் புகைப்படத் துறையில் முன்னேற்றம் காண முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.***

**புகைப்படத்துறையில் ஆர்வமுள்ள பெண்களுக்கு இலவசமாகப் பயிற்சி வழங்கத் தயாராகவுள்ளேன்**

கேள்வி:- இத்துறையினுள் நுழைந்ததால் நீங்கள் பெற்றுக்கொண்ட அனுபவம் என்ன?



***பதில்:- புகைப்படம் எடுப்பதற்காக வெளியில் செல்லும் ஒவ்வொரு இடங்களிலும் வேறுபட்ட மனநிலை கொண்ட மனிதர்களைக் காணக் கூடியதாய் இருந்தது. அவர்களுடன் பழகும் வாய்ப்பும் கிடைத்தது. அதேவேளை, ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு வகையான கலாசார முறைமைகள் இதன்மூலம் பொறுமை, சகிப்புத்தன்மை, வாடிக்கையாளர்களுடனான தொடர்பாடல் முறைமைகள் உட்பட மற்றும் பல நல்ல விடயங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாய் இருக்கிறது.***

கேள்வி:- இப்புகைப்படத் துறையில் நீங்கள் செய்த சாதனைகள் எனக் குறிப்பிடுவது?

***பதில்:- வளர்ச்சியடைந்துவரும் நவீன தொழில்நுட்ப முறைகளுக்கு ஏற்றவகையில், தற்போது நவீன தொழில்நுட்ப வீடியோக் கமராக்கள் மூலம் மிக்ஷிங் வேலைகளைத் திறம்படச்செய்து வருவதுடன், புகைப் படக் கலையகத்தையும் அதற்கு ஏற்ற வகையில் நவீன வசதிகளுடன் விஸ்தரித்துள்ளேன்.***

***இதைவிட, ஒப்பனைக்கலை மற்றும் வைபவங்களுக்குரிய கேக் ஐஸிங் வகைகளையும் செய்து வருகிறேன். இவை அனைத்தும் தனித்து ஒரு பெண்ணாக இருந்துகொண்டு செயற்படுத்துவதை எனது சாதனையாகவே கருதுகின்றேன்.***

கேள்வி:- புகைப்படத் துறையுடன், ஒப்பனைக் கலையையும் இணைத்துச் செய்வதாகக் கூறுகிறீர்கள். அது பற்றி...?

***பதில்:- புகைப்படம் மற்றும் வீடியோ ஆகிய இரண்டு சேவைகளையும் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக ஒப்பனைக்கலையைச் செய்து வருகிறேன்.***

கேள்வி:- உங்கள் தொழில் முன்னேற்றத்திற்கு ஏதாவது தடைகள் இருந்ததுண்டா? அவற்றை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

***பதில்:- எனது தொழிலை முன்னெடுத்துச் செல்கையில் கஷ்டங்கள், தடைகள் எனக் குறிப்பிடக்கூடிய அளவு எதுவும் ஏற்படவில்லை.***

***எனது மகனை இத்துறையில் முற்றுமுழுதாக ஈடுபடுத்தியுள்ளதால் எதிர்கொள்ளவேண்டிய சிறுசிறு பிரச்சினைகளைக் கூட இலகுவாகத் தீர்த்துக்கொண்டு எனது துறையை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக உள்ளது.***

கேள்வி:- நீங்கள் ஒரு வெளிப்புறப்படப்பிடிப்பாளரும் கூட இந்த வகையில், ஒருநாளில் அளவுக்கதிகமான ஓடர்கள் வந்தால் அதை எவ்வாறு சமாளிப்பீர்கள்?

***பதில்:- ஒருநாளில் என்னால் செய்யக்கூடிய அளவு ஓடர்களைத் தான் நான் எடுத்துக்கொள்கிறேன். அவ்வாறு தவிர்க்கமுடியாத பட்சத்தில் அதிகமாக ஓடர்கள் வரும்போது இத்தொழிலில் இணைந்து செயற்படும் வேறு புகைப் படப்பிடபாளர்கள் மூலம் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்.***

கேள்வி:- நீங்கள் ஓர் பெண்ணாக இருந்துகொண்டு இத்துறையில் ஈடுபட்டு வருகின்றமைக்கு சமூகத்தில் எந்தளவில் வரவேற்பு உண்டு?

***பதில்:- குறிப்பாக பூப்புனித நீராட்டுவிழா, திருமண வைபவம் போன்றவற்றிற்கு ஆண்களைவிடப் பெண் ஒருவர்மூலம் படம் எடுப்பதையே எமது சமூகம் கூடிய அளவு வரவேற்கின்றது. சமூகத்தினர் தமது ஆதரவையும் மதிப்பையும் வழங்கிவருவதை எனது அனுபவத்தின்மூலம் நேரிடையாகவே உணர்ந்துள்ளேன்.***

கேள்வி:- இத்துறையில் மேலும் வளர்ச்சி அடைவதற்கு நீங்கள் வகுத்துள்ள எதிர்காலத்திட்டங்கள் பற்றி கூறமுடியுமா?

***பதில்:- சமூகத்தின் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில், புகைப்படத் துறையில் அனைத்துத் தொழில்நுட்பங்களையும் செயற்படுத்துவதில் கூடிய ஆர்வமும், கவனமும் செலுத்தி வருகிறேன்.***

***அதனுடன், இத்தொழிலில் எனக்கு உதவியாக எனது சகோதரன் முருகமூர்த்தி மற்றும் எனது பெறாமகன் முரளி ஆகியோரையும் ஈடுபடுத்துவதன் ஊடாக வளர்ச்சியை முற்றுமுழுதானதாக மாற்றலாம் எனத்திட்டமிட்டுள்ளேன்.***

கேள்வி:- இறுதியாக நீங்கள் கூறவிரும்புவது?

***பதில்:- இத்தொழிலில் ஆர்வமுள்ள பெண்களுக்கு இலவச புகைப்படப் பயிற்சியை வழங்கத் தயாராகவுள்ளேன். முற்றுமுழுதான சிறந்த பயிற்சிகளை அவர்களுக்கு வழங்குவதன் ஊடாக என்னைப்போன்றதோர் சமுதாயததை உருவாக்குவதற்குப் பிரயத்தனப்படுகிறேன். ஸ***

**செவ்வி கண்டவர்**
**வட்டு. ப.தேவா**

# முஸ்லிம்களின் திட்டவரைபு மாத இறுதியில் சமர்ப்பிக்கப்படும்

## அமைச்சர் ஹக்கீம் அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நகல் திட்ட வரைபுப் பணிகள் எதிர் வரும் 31ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டு விடும் என கட்சியின் தலைவரும் கப்பல், துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதற்காக கடந்த 22ஆம் திகதி முதல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் விவகாரக் குழு இப் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.

இவ் வரைபு இனப் பிரச்சினையின் நிரந்தர தீர்வுக்கான வரைபாகவே இருக்கும்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான யோசனைகளில் முஸ்லிம்களின் வரைபு ஒரு அங்கமாகவே இருக்கும்.

அத்துடன், இவ் யோசனைகள் அடங்கிய திட்டவரைபு ஒன்று அடுத்த சில வாரங்களுக்குள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்படும்.

இதேவேளை, இந்தியா, இங்கிலாந்து, வட அயர்லாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, அங்குள்ள சட்ட வல்லுநர்களுடன் இது குறித்த ஆலோசனைகளும் அனுபவங்களும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

எனவே இந்த மாற்று யோசனைகள் முறையாக தயாரிக்கப்பட்ட தொன்றாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-60,10)


# ஊழியர்கள் போராட்டம்

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பும் ஊழியர்கள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாண்டுக்கான போனஸ் தொகை இது வரை வழங்கப்படாததை கண்டித்தும், விரைவில் போனஸ் பணத்தை வழங்குவதற்கு ஏற்ற வகையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரி பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் எண்ணெய் விநியோகப் பணிகள் ஸ்தம்பிதம் அடையும்நிலை ஏற்பட்டுள்ளது.

(தி-18,10)



யாழ்.மத்திய கல்லூரியில். அண்மையில் நடைபெற்ற மாணவர்கள் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட துடுப்பாட்டத்துறை மூத்த பயிற்சியாளரும், கல்லூரியின் பழைய மாணவருமான வி.கே. சண்முகலிங்கம், சிரேஷ்ட - மாணவ தலைவருக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்குவதை படத்தில் காணலாம்.
(படம்:- எஸ்.சாந்தன்)



யாழ்.மத்திய கல்லூரியின் சேவைக்கழகம் தரம் 6,7 வகுப்பு மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் செயற்திட்டமொன்றை ஆரம்பித்திருந்தது. இதில் அதிக தொகையை சேமித்த மாணவன் ஒருவருக்கு அப் பிரிவின் அதிபர் எஸ். பேரின்பநாதன் தேசிய சேமிப்பு வங்கியின் பரிசை வழங்குகிறார். (படம் :- பிரதீபன்)

# அரசங்குளம் நலன்புரி முகாமில் இன்னும் 234 குடும்பங்கள்

(வவுனியா)

வவுனியா அரசங்குளம் நலன்புரி நிலையத்தில் 234 அகதிக் குடும்பங்கள் இன்னும் தங்கியுள்ளன.

1990 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந் நலன்புரி நிலையத்தில் பல்வேறு பிரதேசங்களில் போரினால் இடம் பெயர்ந்த மக்கள் வாழ்ந்து வந்தனர்.

தற்போது யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 234 குடும்பங்கள் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக, தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் இங்கு தொடர்ந்தும் தங்கியுள்ளன. (தி-64,8)

# வீதிகளை திருத்தக் கோரி அரச அதிபருக்கு மகஜர்

(இருபாலை)

இருபாலை கிழக்கிலுள்ள 3 வீதிகளை புனரமைக்கக் கோரி கோப்பாய் தெற்கு கற்பக விநாயக ஆலய திருப்பணியினர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

இருபாலை கிழக்கிலுள்ள விதானையார் வீதி, குழுக் கண்டி வீதி, அரசடி வீதி ஆகிய வீதிகளை செப்பனிடக் கோரியே மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில், மேற்படி பிரதேசங்களில் சுமார் 400 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன எனவும், இவ் வீதியை திருத்துமாறு கோரி கடந்த 6 மாதங்களுக்கு முன்னரும் இந்து கலாசார அமைச்சரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டும்,

எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-84)

# செய்தித்துளிகள்

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

நாவலடி பிடாரி கோயிலடி வீதிக்கு மின்சார விநியோகத்திற்கென யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து 2 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். (தி-18)

## வடமராட்சி கிழக்கில் 2 கிலோ கஞ்சா மீட்பு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் உள்ள நித்தியாவெட்டை முள்ளியான் பகுதிகளில் ஒரு தொகுதி கஞ்சா மீட்கப்பட்டதுடன் அது தொடர்பாக சந்தேக நபர் ஒருவரையும் காவல்துறையினர் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

காவல் துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்படி இடங்களில் திடீர் முற்றுகையில் ஈடுபட்ட காவல்துறையினர் சந்தேக நபர் ஒருவரை கைது செய்ததுடன், 2 கிலோ கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரைக் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் படு படுத்தியபோது நீதிபதி பிரபுராஜ் குறிப்பிட்ட நபரை எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (தி-35)

## திருப்பலிப் பூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மரியன்னை தேவாலயத்தில் புதுவருட திருப்பலி எதிர்வரும் 31ந் திகதி நள்ளிரவு 11.45 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

புதுவருடத்தின் முதலாந் திருப்பலி காலை 6.30 மணிக்கும் இரண்டாம் திருப்பலி காலை 8 மணிக்கும் யாழ். ஆயர் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும். (ச)

## கண் சிகிச்சை

(மூளாய்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு கண் சத்திர சிகிச்சை நிபுணர் கலாநிதி சிவந்தா கண் தொடர்பான சிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளார்.

மேற்படி வைத்தியசாலையில் கண்சிகிச்சையைப் பெற விரும்புவோர் தங்கள் வரவுகளை முன் கூட்டியே பதியுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (தி-50)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றமும், இந்து சமயப் பேரவையும் இணைந்து நடாத்தும் திருவாசக முற்றோதல் நிகழ்வு கந்தர் மடம் ஸ்ரீசெல்ல நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக், கிழமை காலை 6.00 மணி முதல நடைபெறவுள்ளது. (தி)

## கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், யுனிசெவ் நிறுவனமும் இணைந்து சிறுவர் நலத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு கிளிநொச்சி அரச அதிபர் தி. இராசநாயகம் தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களை கற்றலில் மீள இணைத்தல், சிறுவர்களின் பாதுகாப்பு உள்ளிட்ட பலவிடயங்கள் இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளன. (தி-64,8)

## மயானம் புனரமைப்பு

(இருபாலை)

இருபாலை கிழக்கு செக்கடி இந்து மயான புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்து கலாசார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 50 வருடங்களாக இம் மயானம் கவனிப்பாரின்றி இருந்து வந்தமை தெரிந்ததே. (தி-84)

## வேலை நிறுத்த போராட்டம் தொடரும்

(கொழும்பு)

தென்னிலங்கைப் பிரதேச செயலாளர்கள், உதவிப்பிரதேச செயலாளர்கள். மற்றும் நிர்வாக சேவைகள் அதிகாரிகள் ஆகியோர் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தப்போராட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் உள்ள 308 பிரதேச செயலகங்களிலும் கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலை நிறுத்தப் போராட்டம், புளத் சிங்களப் பிரதேச செயலாளர் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்து நடத்தப்பட்டு வருகின்றது. (தி-60,10)

## ஏ.பி.எஸ் மருந்துக்கு தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் விசர் நாய்க்கடிக்கான மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

விசர் நாய்க்கடிக்கான ஏ.பி.எஸ் மற்றும் நாய் கடித்த காயத்தின் கிருமிகளைக் கட்டுப்படுததும் ஏ.ஆர்.எஸ் ஆகிய மருந்துகள் இல்லாத காரணத்தினால, விசர் நாய்க்கடிக்கு உள்ளாவோர் யாழ். போதனா வைத்தியசாலை, வவுனியா வைத்திய சாலைகளுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (தி-64,8)

## சட்டமா அதிபரிடம் அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தென் மாகாண முதலமைச்சர் எம்.கே.ரஞ்சித் படுகொலை குறித்த விசாரணைகளின் அறிக்கைகளை கொழும்பு விசேட புலனாய்வுப் பிரிவினர், சட்டமா அதிபரிடம் கையளித்துள்ளனர்.

கடந்த மே மாதம் நடைபெற்ற இப் படுகொலைச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த புலனாய்வுப் பிரிவினர், 5சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ளனர்.

அத்துடன், படுகொலை நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள பொருட்களை இரசாயன பகுப்பாய்வுக்காக அனுப்பியுள்ளனர்.(தி-60,10)

## முதலாம் இடம்

(ஆனைப்பந்தி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் கோப்பாய்ப் பகுதி மக்களின் அனுசரணையுடன் மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட போட்டிகளில் "புதிய நிர்மாணம்" என்னும் குழு நடனப்போட்டி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.(தி109)

## கூட்டம்

(கல்வியங்காடு)

நீர்வேலி ப.நோ.கூ. சங்கத்தின் 22, 34 ஆம் கிளைக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (தி-74)

## ஊடகவியலாளருக்கு அ.அட்டை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள பிரதேச ஊடகவியலாளர்களுக்கான 2004 ஆம் ஆண்டிற்குரிய ஊடக அடையாள அட்டைகளை வழங்குவதற்கு அரசாங்கத் தகவல் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

அந்தந்த ஊடக நிறுவனங்களால் சிபார்சு செய்யப்படும் பிரதேச ஊடகவியலாளர்களுக்கே எதிர்வரும் ஆண்டுககான ஊடக அடையாள அட்டை கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-18)

## திறப்பு விழாவும், ஆண்டு நிறைவு விழாவும்

(யாழ்ப்பாணம்)

புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள மட்டுவில் மத்தி பொது நோக்கு மண்டபத திறப்புவிழாவும் கலைவாணி மழலைகள் கல்விப் பூங்காவின் 21 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் இன்று சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளன.

கல்வி அபிவிருத்திக் குழுத்தலைவர் எஸ்.உமாமகேஸ்வரன தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசனும், சிறப்பு விருந்தினர்களாக கியூடெக் நிறுவன இயக்குநர் வணபிதா சி.ஜி ஜெயக்குமார் அடிகளார், தென்மராட்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுபபாளர் எஸ்.மாறன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (தி-16)


## பிரதான போதனைகள்

★ ஆண்பிள்ளை பிறப்பதைப்போன்றே பெண்பிள்ளையின் பிறப்பும் மகிழ்ச்சியானதாக இருத்தல் வேண்டும்.

★ பெண்பிள்ளைகள் ஆண்பிள்ளைகளிலும் குறைவானவர்கள் அல்லர் சந்தர்ப்பம் கிடைத்தால் ஆண்பிள்ளைகள் செய்யும் வேலைகளை பெண்பிள்ளைகளும் செய்வார்கள்.

★ ஆண்பிள்ளைகளையும் பெண்பிள்ளைகளையும் சமமாக நடத்துதல் வேண்டும். அவர்கள் தங்கள் திறமையை வெளிக்காட்டுவதற்கு சமசந்தர்ப்பம் அளித்தல் வேண்டும்.

★ பெண்களுக்கான வேலைவாய்ப்புக்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. வெவ்வேறு தொழில்களைச் செய்யுமாறு பெண்பிள்ளைகளுக்கு ஊக்கமளித்தல் வேண்டும்.

### சமவாய்புக்குரிய உரிமை

பாரபட்சம் பிறப்பின் போதே ஆரம்பிக்கின்றது. ஆண்பிள்ளையின் பிறப்பைக் கொண்டாடுகையில் பெண்பிள்ளையின் பிறப்பை ஒரு சுமையாகப் பார்க்கின்றார்கள். கருவாக இருக்கும்போதே பிள்ளைகளின் பாலை அறிந்துகொள்ளும் வசதி இப்பொழுது இருக்கின்றபடியால் பெண்பிள்ளையை குறைப்பிரசவம் மூலம் அழித்துவிடும் செய்கை அதிகரித்து வருகின்றது. பெண்பிள்ளைகள் அவர்களுக்கு எதிராகப் பாரபட்சம் காட்டும் சூழலில் வளர்ந்து வருகிறார்கள். அதனால் அவர்கள் தங்களை ஆண்பிள்ளைகளிலிருந்து குறைவானவர்கள் என்று எண்ண ஆரம்பிக்கின்றனர். இதன் விளைவாகப் பெண்களிலும் பார்க்க ஆண்கள் அதிகம் வேலை செய்யக்கூடியவர்கள் என்ற தப்பான அபிப்பிராயம் உருவாகின்றது.

சமவாய்ப்புக்குள்ள உரிமை என்பது பிறப்பிலிருந்தே (தாயின் வயிற்றிலிருக்கும் போதே) சமமாக நடத்தப்படுதல் என்பதையும் குறிக்கின்றது. உயிர் வாழ்வதற்கும் பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் ஆண்பிள்ளைகளைப் போன்றே பெண்பிள்ளைகளுக்கும் சமஉரிமைகள் உண்டு. போதியளவு வாய்ப்பும் சமசந்தர்ப்பமும் கொடுககப்பட்டால் ஆண்பிள்ளைகளைப் போன்றே பெண்பிள்ளைகளும் திறமையுள்ளவர்களாக வளர்வர். அத்தகையோர் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் நன்மை செய்யக்கூடியவர்களாக இருப்பர்.



உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண்—30,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
(C/6946)

unicef

# பேச்சுக்களை குழப்பும் முயற்சியில் முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபடுகிறது

## கலாநிதி குமரகுருபரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு அவர்களுக்கு உரிய உரிமைகள் கிடைக்கும் வரை தமிழ் அரசியல் கட்சிகள் அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும்.**

**இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் கலாநிதி எஸ்.குமரகுருபரன் இலங்கை வானொலிக்கு அளித்த விசேடபேட்டியில் தெரிவித்துள்ளார்.**

அப்பேட்டியின் தொகுப்பு விபரம் வருமாறு,

சாதாரணமாக தமிழ் அரசியல் வாதிகளைப் பொறுத்தவரையிலும், தமிழ் அரசியலைப் பொறுத்த வரையிலும் தமிழ் இனத்தின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் வரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீடிக்கப்படவேண்டும்.

அப்போது தான் தமிழர்களின் கோரிக்கைகளை ஒருமித்த குரலில் வெளிப்படுத்த முடியும். அதனுடன் பாராளுமன்றத்தில் தமிழர்களுக்கு கூடுதலான ஆசனங்களும இருக்கவேண்டும்.

அதற்கு அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும்.குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சியான, தமிழர் விடுதலைக் கூட்டணியில் சில முரண்பாடுகள் அதிகரித்து வருகின்றன. இதனால் கட்சி பிளவுபடும் நிலை உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கட்சிக்குள் இருக்கும் இந் நிலைப்பாடு மாறவேண்டும். இத்தகைய உடகட்சிப்பூசல்களை நீக்குவதற்கு, சகல தமிழ்க்கட்சிகளும் சம்பந்தப்பட்வர்களுக்கு பல அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

அத்துடன் சம்பந்தப்பட்ட தமிழ்க கட்சி தமக்கிடையே கருத்து வேறறுமைகளை வளர்த்துக் கொள்ளாதிருக்க வேண்டும்.

அவ்வாறு சில கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டாலும், காலம், இடம்பொருள் அறிந்து அதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அத்துடன் இன்றைய காலத்தின் தேவையை அறிந்து அக்கட்சி செயற்பட வேண்டும்.

இதேவேளை தமிழர் விடுதலைக கூட்டணியில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எந்தவிதத்திலும் பாதிக்காது என்றே கருதுகிறேன்.

ஆயினும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகள் கூட்டணியில் ஏற்பட்டுள்ள சர்ச்சையை தீர்க்க நடவடிக்கை எடுக்கும்.

அற்கான நடவடிக்கையிலும் சிலர் இறங்கியுள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக நாமும் செயற்படுவோம்.

இதற்கிடையில் , தேர்தல் ஒன்று நடைபெறும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன், மலையகத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளும் இணைந்து போட்டியிடும் என பல பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது குறித்து கடந்த 21 ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனைச் சந்தித்த போது எடுத்துக் கூறியிருந்தேன்.

அதற்கு அனைவரும் ஒன்றிணைந்து ஓரணியில் தேர்தலில் போட்டியிடுவதனை நாம் எதிர்க்கவில்லை. ஆயினும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மலையகத்தில இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து மலையக மக்கள் முன்னணியும் மேல் மாகாணத்திலே மேல் மாகாண மக்கள் முன்னணியும் தமிழ் மக்களுடன் ஒருமைப்பாட்டைக் கட்டிக காக்கக்கூடிய அளவிற்கு வளர்ச்சிபெறவேண்டும்.

அதை நோக்கி மக்களை கவரக்கூடிய செயற்திட்டங்கள் அமைய வேண்டும் எனவும்,

குறிப்பாக அந்ததப் பகுதியில் அவர்கள் போட்டியிட்டு அப்பகுதி தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது பற்றியும், பாராளுமன்றில் பெருமளவான தமிழ் ஆசனங்களைப் பெற்று தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒரே குரலில் ஒருமிதது எடுத்துக் கூறுவது பற்றியும் தமிழ்ச்செல்வன் தெளிவுபடுத்தி இருந்தார்.

இவை தவிர, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் கடந்த 2002 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் செல்லுபடியற்றது என விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கிழக்கு இலங்கைப் பத்திரிகையாளர்களைக் கடந்த 19ஆம் திகதி சந்தித்த போது கூறியிருந்தார். இதனை அடுத்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பல்வேறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.

"விடுதலைப்புலிகளின் இந்த அறிவிப்பு நியாயமற்றது. இது முஸ்லிம் மக்களை ஏமாற்றுவது போன்ற செயலாகும். முஸ்லிம் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்ற விடுதலைபபுலிகள் தவறிவிட்டனர்" "இவர்களா முஸ்லிம் மக்களுக்கு உரிமைகளை வழங்கப்போகிறார்கள்" எனக் கூறி, முஸ்லிம் காங்கிரஷ் கட்சி தமிழ்ச்செல்வனின் இந்த அறிவிப்பை நிராகரித்துள்ளது.

இவ் விடயத்தில் நான் பெரிதாக கருத்து எதனையும் கூறுவதற்கு விரும்பவில்லை.

ஆயினும், "சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் சமூகமும் தனித்தரப்பாக பங்குபற்ற வேண்டும்" என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சி கோரி வந்ததுடன், அதுபற்றி விடுதலைப்புலிகளுடன எதுவும் பேசாது, தன்னிச்சையான முறையில் சில செயற்பாடுகளில் இறங்கி, விடுதலைப்புலிகளை விமர்சிதது சமாதானத்தை பாதிக்கச் செய்யும் வகையில் நடந்து விட்டது.

இதேசமயம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தற்போது இடைக்கால நிர்வாக சபை தொடாபாக திட்டவரைபு ஒன்றை தயாரித்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த திட்டவரைபு குறித்தும் அக்கட்சி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எதுவும் கலந்தாலோசிக்கவில்லை.

அத்துடன் மூன்றாம் தரப்பாக பேச்சுவார்த்தையில் பங்குபற்ற வேண்டும் எனக் கோரிக்கொண்டு இத்தகைய திட்டவரைபை தன்னிச்சையாகத் தயாரித்து முன்வைக்க முயல்வது சமாதானப் பேச்சுவார்த்தைகளை குழப்புவதாகவே அமையும் என்பதை இங்கு கூறிவைக்க விரும்புகிறேன்,

ஏன் என்றால் இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலைக்கு காரணம் புலிகளின் உரிமைப் போராட்டம்தான்.

அவர்களின் போராட்டத்தின் பயனாகத்தான் இன்று சமாதானச் சூழ்நிலை ஏற்படடு, சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தன.

இந்தப்போராட்டத்தில் முஸ்லிமகள் எவ்வித பங்களிப்பும் செய்யவில்லை. அத்துடன் போரினால் பெரும் பாதிப்புக்களையும் எதிர்நோக்கவும் இல்லை.

இதுவரை காலமும் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள் குறிதது அவர்கள் கோரிக்கை எதனையும் முன்வைக்கவில்லை.

கடந்த காலங்களில் முஸ்லிம சமூகத்தில் பலர் அமைச்சர்களாக இருந்தார்கள்.அப்போது கூட தமது மக்களின் அபிலாஷைகளை முன்வைக்கவில்லை.

அத்துடன் இலங்கை-இந்தியாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தததில் கூட முஸ்லிம்கள் மூன்றாம தரப்பு என குறிப்பிடப்படவில்லை.

இந்நிலையில் தற்போது பெரும இன்னல்கள் மத்தியில் நடைபெற்று வரும் அரசு-விடுதலைப்புலிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தையில முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாக பங்குபற்றவேண்டும் எனக் கோரி வருவது தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையை குழப்பும் முயற்சியாகும்.

அத்துடன் முஸ்லிம் சமூகத்தை விடுதலைப்புலிகள் ஒரு போதும் ஏமாற்றவில்லை.அவர்களின் உரிமைகளை பறிக்கவுமில்லை. முஸ்லிம்களின் பிரச்சினைகள், கோரிக்கைகள் குறித்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவே புலிகள் விரும்புகிறார்கள் என்பதையும் இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன் என்றார்.

(தி-60,10)

---

# கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அரை இறுதி ஆட்டங்கள் முடிவு

(சுண்டுக்குளி)

யாழ்.முடமாவடி ஞானவைரவர் சனசமூக நிலைய ஆதரவுடன் முடமாவடி விளையாட்டரங்கில், மாவட்ட ரீதியில் நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் அண்மையில இடம பெற்ற 2 அரையிறுதி ஆட்டங்களின் பெறுபேறுகள் வருமாறு,

கே.கே.எஸ்.விளையாட்டுக் கழக அணி, அதனை எதிர்த்து ஆடிய ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை 3:1என்ற செற்கணக்கில் 20:25, 25:19, 25:22, 29:27 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி, அதனை எதிர்த்தாடிய தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழக அணியை, 3 நேர் செற்களில் 25:19,. 25:20, 25:22 என்ற புள்ளிகள் கணக்கில் தோற்கடித்து இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

(தி-110)

# பாடசாலை கராத்தே போட்டியில் இலங்கை அணி சம்பியன்

இந்தியாவின் புதுடெல்லியில் நடைபெற்ற பாடசாலை கராத்தே போட்டித் தொடரில் இலங்கை பாடசாலை கராத்தே அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

இந்தப் போட்டித் தொடரில் இலங்கை பாடசாலை கராத்தே அணியும், இந்தியாவின பல்வேறு மாநிலங்களின பாடசாலை கராத்தே அணிகளும் கலந்து கொண்டன.

வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிககொண்ட இலங்கை பாடசாலை கராத்தே கழக அணியினர் கடந்த புதன்கிழமை நாடுதிரும்பினர். இவாகளுக்கு பலத்த வரவேற்பு அளிககப்பட்டது. இலஙகையில் பல்வேறு பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி இந்த போட்டித் தொடரில் கலந்து கொண்டிருந்த 43வீர, வீராங்கனைகள், 21தங்கப் பதக்கங்கள், 15வெளளிப் பதக்கங்கள் மற்றும் 12வெணகலப் பதக்கங்கள் அடங்கலாக மொத்தம் 48பதக்கங்களை வெனறெடுத துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(தி-68)

# கொமன் வெல்த் நாடுகளுக்கிடையில் கிரிக்கெற் சுற்றுப்போட்டி

பொதுநலவாய நாடுகளுக்கிடையில் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டி ஒன்றை முதல்முறையாக நடாதத இந்தியா தீர்மானித்துள்ளது.

நேற்று ஆரம்பமாகியுள்ள இந்தப் போட்டித் தொடரில் இலஙகை அணி கலந்து கொள்ளும் முதலாவது போட்டி எதிர்வரும் 31 ஆம திகதி இந்திய அணிக் கெதிராக நடைபொறவுள்ளது.

இந்தப் போட்டித்தொடரில் கலந்து கொள்ளும் 19 வயதுக்குட்பட்ட இலங்கையணியின் தலைவராக கொழும்பு றோயல் கல்லூரி மாணவன் தாரககோற்றாவே நியமிக்கப்பட்டுள்ளார்.

14 பேர்கொண்ட இந்தக் குழுவில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த வீரர்களும் இடம பெற்றுள்ளனர்.

இந்தப் போட்டித் தொடரில் 7 நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றவுள்ளன.

(தி-68)

# விளையாட்டுச் செய்திகள்

### எவரடி வெற்றிக்கிண்ண

# உதைபந்தாட்ட தொடரில் வவுனியா அணி வென்றது

(சுண்டிக்குளி)

அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் லீக்குகளின் 19வயதிற்கு உட்பட்ட பிரிவு அணிகளுக் கிடையில் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்டு வரும் எவரடி" வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த திங்கட்கிழமை சென் அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில், வவுனியா மாவட்ட தெரிவு அணி யாழ். மாவட்ட தெரிவு அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது.

ஆட்டம் ஆரம்பமாகி 8வது நிமிடத்தில் வவுனியா அணி வீரன் எஸ்.ரூபன் யாவரும் மெச்சத்தக்க வகையில் ஆடி, தமது அணிக்கு ஒரு கோலை பெற்றுக்கொடுத்தார். அதனை தொடர்ந்து யாழ். அணி வரர்கள் மும்முரமாக ஆடி 16 வது நிமிடத்தில் ஒரு கோலை போட்டனர்.

இடைவேளையின் பின் இரு அணி வீரர்களும் வெற்றியை தமதாக்கிக்கொள்ள வேண்டும் என்ற வேகத்துடன் ஆடியவேளை, யாழ். அணி கோல்போட கிடைத்த பல சந்தர்ப்பங்களை நழுவிடவே, வவுனியா அணி இறுதி நேரத்தில் தமக்குக் கிடைத்த பெனாட்டி உதையை சிறப்பாக பயன்படுத்தி தமது வெற்றியை நிச்சயப்படுத்திக் கொண்டனர்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் சி.ஜே. தேவராஜா, முன்னை நாள் வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி கே.ஏகாம்பரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(தி-110)

# முதுமையை நோக்கிய இளையோரே ஏன் இந்த காவோலை?

கைதடி அரச முதியோர் இல்லத்தில் எழுதுநராக கடமையை பொறுப்பேற்றுள்ள நான் "முதுமையை நோக்கிய இளையோரே ஏன் இந்த காவோலை?" என்ற வினா ஊடாக முதியோர்பற்றி என் உள்ளத்தில் எழுந்த எண்ண வரிகளை முன்வைக்க விளைகின்றேன்.

சர்வதேச ரீதியில் முதியோர்களின் பெறுமானம் முக்கியத்துவம் உணரப்பட்டு அவர்கள் பற்றிய ஓர் வழிப்புணர்வை இளையோர் மத்தியில் ஏற்படுத்தும் பொருட்டு அவர்களுக்கென்று முதியோர் தினம் ஏற்படுத்தப்பட்டு ஒக்.01-07 வரை முதியோர் வாரமாக அனுஷ்டிக்கப்படுவது மிகவும் பொருத்தமானதே. இன்றைய நவீன கணனி யுகத்தில் முதியவர்கள் குடும்பத்தினராலும், உறவினர்களாலும் புறக்கணிக்கப்பட்டு ஒரு வேண்டாப் பண்டமாக ஓரம் கட்டப்பட்டு வீதிக்குத் துரத்தப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலை மன வேதனைக்குரிய விடயமாகும். முதுமை என்பது மனித வாழ்க்கை வட்டத்தில் ஒவ்வொரு மனிதனும் சந்தித்தே ஆகவேண்டிய இறுதிக் கட்டமாகும். இதில் இருந்து எவராலும் தப்பவோ விலகி ஓடவோ முடியாது. இதையே திருவிவிலியத்தில் சீராக் 8-6 இல் "முதியோர் எவரையும் இகழாதே; நம்முள சிலரும் முதுமை அடைந்து வருகிறோம்" என்று கூறுகின்றது.

இன்றைய இளைஞர்கள் முதியவர்களை நைன்ி என்று ஏழனம் செய்வதையும் துன்புறுத்துவதையும் பார்க்கும் போது "காவோலை விழ குருத்தோலை சிரிக்கும்" என்கின்ற பழமொழி நினைவுக்கு வரும். ஆனால் இந்தக் காவோலைகள் தான் இன்றைய துர்ப்பாக்கியமான சூழ்நிலைகளில் பல்வேறு காரணிகளினால் மடிந்துபோகின்ற குருத்தோலைகளை தாங்கிநிற்கின்ற பாதுகாக்கின்ற அரண்களாக இருப்பதை நாம் காணுகின்றோம். இன்று அநேகமான குடும்பங்களில் கணவர், மனைவி இருவருமே உத்தியோகம் மற்றும் பல்வேறு காரணிகளினால் வெளியே செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இவ்வேளையிலெல்லாம் வீட்டைப் பாதுகாக்கின்றவர்களும், குழந்தைகளை பராமரிக்கின்றவர்களும், வீட்டு வேலைகளில் ஒரு பகுதியையாவது முடித்து வைக்கின்றவர்களும் இந்த முதியவர்களே. இந்த முதுமைகள் இருப்பதனால்தான் இளமைகள் உல்லாசமாக வெளியே உலாவர முடிகின்றது.

முதியவர்கள் அநேகமாக வீட்டுக்கு வெளியில் அல்லது "விறாந்தையில்" படுப்பார்கள். அல்லது பிள்ளைகளாலேயே வெளியில் துரத்தப்படுவார்கள். இவர்கள் வெளியில் உறங்கும் போது உள்ளே இருக்கும் இளமைகள் பாதுகாப்பை உணருகின்றன. அச்சம் தவிர்க்கப்படுகின்றன. இளமைகளின் பாதுகாப்பு கவசமாக விளங்குவது இந்த முதியவர்களே. துன்பம்வரும்வேளையிலெல்லாம் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி என்று இந்த முதியவர்களைத்தானே அழைக்கின்றோம். ஒரு வீட்டில் மரணச்சடங்கு என்ற ஒன்று வரும்போது அங்கே முப்பத்தியொன்று முடியும் வரையாவது தூரத்து முதியவர்கள் கூடவந்து தங்கி இளமைகளின் அச்சத்தைப் போக்கி பாதுகாப்பளிப்பார்கள். இவைகளுக்கெல்லாம் தேவைப்படுகின்ற முதியவர்கள் ஒதுக்கப்படுவது ஏன்? அவர்களால் இயலாமல் போகின்ற குறுகிய காலத்திற்கேனும் ஆதரிக்க இடமற்றுப்போவது ஏன்? நாம் ஒவ்வொருவரும் எமது மூதாதையரின அனுபவங்களையும், அறிவுரைகளையும் வைத்துக் கொண்டு தானே எமது வாழ்க்கையை நெறிப்படுத்திக்கொண்டு இருக்கின்றோம். இதை சீராக் 8:9இவ்வாறு கூறுகின்றது.

"முதியோரின் உரைகளைப் புறக்கணியாதே அவர்களும் தங்கள் முன்னோரிடமிருந்தே கற்றுக்கொண்டார்கள். அவர்களிடமிருந்து நீயும் அறிவுக் கூர்மை பெறுவாய்" இவற்றையெல்லாம் மறந்து முதியவர்களை ஒதுக்கிவிடுவது வேதனைதரும் விடயமாகும். இவ்வாறு அநாதைகள் ஆக்கப்பட்ட முதியவர்கள தான் இன்னும் நாம் வாழ தம்மையே முழுமையாக கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். தம் மரணத்திற்குப் பின்னும் எமக்குப் பயன்படுவதை எம்மால் உணரமுடியுமா? இன்று மனிதன் சுகதேகியாக வாழ்வதற்கு வைத்தியத் துறை முக்கியம் பெறுகின்றது. இங்கே மனித உடலின் ஒவ்வொரு பகுதி சார்ந்த வைத்திய நிபுணர்கள் உருவாகி வருகின்றார்கள். பல்கலைக்கழகத்திலே பயன்படுத்தப் படுகின்ற மனித உடல், வைத்திய மாணவர்களினால் கீறிக்கிழிக்கப் படுகின்ற மனித உடல் ஒரு உடலை சுற்றி 20க்கு மேற்பட்டவர்கள் நின்று ஆய்வு செய்கின்ற மனித உடல் எல்லாம் இளமைகளால் ஓரம் கட்டப்பட்டவர்கள், முதியோர் இல்லங்களில் சேர்க்கப்பட்டு இறந்தும் இறுதிக கிரியைகள் செய்ய யாருமே இல்லை என்றவர்கள். இன்று எத்தனையோ இளமைகள் பல்கலைக் கழகம் போகின்றன. படித்து பட்டம் பெறுவதற்காக, அதேவேளை இவ்வுலகில் தலைசாய்க்க இடமற்றுப் போன முதியவர்கள் இறந்த பின் பல்கலைக்கழகம் போகின்றார்கள். பட்டம் பெறுவதற்காக அல்ல இளமைகளுக்கு "டாக்டர்" என்ற பட்டத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக. இந்தக் காவோலைகள் விழ குருத்தோலைகள் சிந்திக்கட்டும். □

நா. இராசநாயகம்

---

# புலிகளின் பல தேவைகளை நிறைவேற்றிய பெருமை எம்.ஜி. இராமச்சந்திரனுக்கு உண்டு

## வவுனியா அரசியல் துறைப்பொறுப்பாளர் தெரிவிப்பு

(வவுனியா)

நடிப்பின் மூலம் மக்களுக்கு ஏதோ ஒரு செய்தியை சொன்னவர். அதுமட்டுமல்ல, நடிப்பில் சொன்னதை நியாயப்படுத்தி முதல்வராக இருந்தபோது நிரூபித்துக் காட்டியவர் எம்.ஜி.ஆர்.

தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்திற்கு விடுதலைப் புலிகள் நிதியைப் பெற்றுக்கொள்ள முடியாத கஷ்டமான சூழ்நிலை இருந்தபோது பொருமளவு நிதியை மனமுவந்து வழங்கியது மட்டுமல்ல மற்றும் பல தேவைகள் இருந்த காலகட்டத்தில் அவற்றையும் நிறைவேற்றிய பெருமை அவருக்குண்டு.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

காலஞ்சென்ற முன்னாள் தமிழக முதலமைச்சரும், பிரபல நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் 16ம் ஆண்டு நினைவுதினம் வவுனியா கூட்டுறவுச் சங்க வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

அந் நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர், எங்களுடைய தலைவர் மீது மிகுந்த பாசம் கொண்டவராகவும், தாயகத்தின் விடுதலைப் போராட்டத்தை ஆயுதரீதியாகவே வெல்லமுடியும் என்ற நம்பிக்கையில், இந்தியாவில் இருந்து புலிகள் ஆயுதங்களை எடுத்து வருவதற்கும் பெரும் பங்கு வகித்தார். ஆனால், அவரது வழியில் பின்தொடருகின்ற முதலமைச்சர் ஜெயலலிதா அதற்கு முற்றுமுழுதாக மாறுபட்டவராக விளங்குகின்றார்.

தனது அரசியல் நலன் சார்பாகவே அவரது பார்வை உள்ளதனை நாம் காணுகின்றோம். தமிழகத்தில் அரசியல் ஒரு சாக்கடைபோல் மாறிவிட்டது. சினிமா உலகவாழ்க்கை தான் அங்கு நடைபெறுகின்றது.

இந்தியாவை நாங்கள் நேச நாடாகவே இன்னமும பார்க்கிறோம். பிரதமர் ராஜீவ்காந்தி கொலைசெய்யப்பட்டதற்காக ஈழத்தமிழர்களை வெறுப்பது நியாயமாகாது. பிரதமர் இந்திராகாந்தி சீக்கிய இனத்தவர்களால் கொலை செய்யப்பட்டதற்கு இந்தியாவில் உள்ள அனைத்து சீக்கிய இனத்தையும் வெறுத்தார்களா?

நாங்கள் இன்னமும் இந்தியா மீது பற்று வைத்துள்ளோம். எங்களை தூரவிலகிச் செல்லவிடாது அரவணைக்கவேண்டியது இந்தியாவின் பொறுப்பு. நாங்கள் நடத்தியது தர்மப் போர் இதனைத் தடுக்க எந்த சக்திகள் முனைந்தாலும் அது வானத்தில் புல்லு முளைக்குமானால் பசுவுக்கும் இறக்கைகள் முளைப்பதுபோல் ஆகிவிடும் என்றார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கருத்துத் தெரிவிக்கையில்,

பல அர்ப்பணிப்புக்கள், தியாகங்களுக்கு மத்தியில் இந்த நாட்டில் இப்போது ஒரு சமாதான சூழல் ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் இந்தியா இலங்கை தொடர்பான வெளிவிவகாரக் கொள்ளையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, வடக்கு, கிழக்கில் வாழுகின்ற தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க இந்தியா பங்களிப்பைச் செய்ய முன்வரவேண்டும். வடக்குக் கிழக்கில் வாழுகின்ற தமிழ்மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு கலாசார சமய ரீதியாக இருந்துள்ளது.

கடந்தகாலத்தில் நாட்டில் தலை தூக்கிய அரசியல் குழப்பங்களால் எங்களுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நீண்டதொரு இடைவெளி ஏற்பட்டுள்ளது. அதனை மீண்டும் புதுப்பித்து நல்லுறவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆவலோடு உள்ளோம். சில துரதிஷ்டவசமான சம்பவங்கள் நடைபெற்றுள்ளது அதனையிட்டுக் கவலை கொள்ளுகின்ற இத்தருணத்தில், தமிழ் மக்களுடைய பிரச்சினை தொடர்பான விடயத்தில் இந்தியாவின் ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தினை அடுத்து தமிழ்த் தலைவர்கள் உட்படத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் தமிழகத்தில் தளம் அமைத்த போது அப்போது தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். பலவழிகளிலும் தனது உதவிகளை வழங்கினார்.

(தி-13)

---

# உவர்நில நெற்செய்கை நவாலியில் பரீட்சார்த்தம்

(நவாலி)

நவாலி தெற்குப் பகுதியில் உள்ள உவர் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்வது தொடர்பான ஆய்வுகள் அண்மையில் சண்டிலிப்பாய் பகுதி விவசாய போதனாசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நவாலி விவசாய சம்மேளனம் ஊடாக சண்டிலிப்பாய் பகுதி விவசாய போதனாசிரியர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வுகளின் முதற்கட்டமாக உவர் நிலப் பகுதித் திட்டப் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு கருத்துரைகள் வழங்கப்பட்டன.

அத்துடன், மேற்படி திட்டப் பயனாளிகளுக்கு 2பரப்பு உவர் நிலத்திற்கு 5கிலோ 125கிராம் ஏ.ரி352ரக விதைநெல் என்ற அளவில் வழங்கப்பட்டதுடன், உவர் நிலப்பயிர்ச்செய்கை பரீட்சித்தும் பார்க்கப்பட்டுள்ளது.

இதில் அப்பகுதி விவசாய உத்தியோகத்தர்கள், விவசாயிகள், விவசாயப் பாடவிதான உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர்கள் உட்பட இதனுடன் தொடர்புடைய பலரும் கலந்துகொண்டனர்.

(தி-34)

---

# செய்தித் துளிகள்

## வலி.வடக்கு மக்களுக்கான பதிவுகள்

(கல்வியங்காடு)

வலி.வடக்குப் பிரதேசத்தில் இருந்து கடந்த 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெயர்ந்த மக்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கமைய பலாலிப் பகுதி மக்களுக்கான பதிவுகள் யாவும் எதிர்வரும் ஜனவரிமாதம் 2ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும், மயிலிட்டிப் பகுதி மக்களுக்கான பதிவுகள் மறுநாள் சனிக்கிழமையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(தி-74)

## ஆசிரியர்களுக்குப் பயிற்சி

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் 2ஆம் நிலைக் கல்வி தொடர்பாக ஒருபாடத்தை ஆங்கில மொழியில் போதிப்பதற்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

அதற்கமைய இப்பயிற்சிக்கு 22 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட விஞ்ஞானம், தொழில்நுட்பம், கணிதம், சுகாதாரம், உடற்கல்வி, சமூகக்கல்வியும் வரலாறும் ஆகிய துறைகளில் பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியும் என அறிவிககப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 31ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும என்றும், அதன் பின்னர் பரீட்சைகள் திணைக்களம் நடத்தும் ஆங்கிலமொழி தொடர்பான எழுத்துமூலப் பரீட்சையில் தோற்றி அதில் சித்தியடைபவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தெரிவுசெய்யப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(தி-60,10)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் ஆதரவில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு ஈழத்துச் சிதம்பர மண்டபத்தல் திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

(தி)

## வழிகாட்டல் நூல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அறநெறிப்பாடசாலைகளில் கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு இதுவரை 320 வழிகாட்டல் நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்துகலாசார விவகார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்பட்டுவரும் இப்பாடசாலை ஆசிரியர்களின் செயற்திறன்களை விஸ்தரிப்பதுடன் மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்காகவுமே இவ்வழிகாட்டல் நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இம்மாத ஆரம்பத்தில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வைத்து இந்நூல்கள் யாவும் வழங்கப்பட்டன.

(தி-4)

## நினைவுதினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் பொன். மதிமுகராசாவின் 5ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்றுக்காலை 10.00 மணிக்கு யாழ்.கூட்டணி அலுவலகத்தில் அனுட்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இவரது, உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், கூட்டணி உறுப்பினர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர். (தி-18)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப் படக்காட்சித் தொடரில் கிறிஸ் காசரவல்லியின் நெறியாள்கையில் உருவான கிரவுர்ஜ (கதை சொல்லியின் கதை) என்ற கன்னடத்திரைப்படம் ஆங்கிலத் துணைத்தலைப்புடன் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர்களான அ. யோகராசா, ச. சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் கலந்துரையாடலும் இடம் பெறும். இந் நிகழ்வுகளில் ஆர்வலர்கள் எவரும் கலந்துகொள்ளலாமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைபபாளர் தெரிவித்துள்ளார்.

(ச)

# அணுவாயுத நிலைகள் மீது இஸ்ரேல் தாக்கினால் பதிலடி கொடுப்போம்

## எச்சரிக்கிறது ஈரான்

(தெஹ்ரான்)
ஈரானின் அணுவாயுத நிலைகளை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல்களை மேற்கொண்டால் இடைத்தூர ஏவுகணைகள் மூலம் பதிலடி கொடுக்கப்படும் மென ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் அலி ஷாம்ஹானி தலைநகர் தெஹ்ரானில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போது இதனைத் தெரிவித்தார்.

ஈரானின் அணுவாயுத தயாரிப்பை அனுமதிக்கமுடியாது என்றும் தேவைப்படின் தாக்குதல் மேற கொள்ளப்போவதாகவும் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சா தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாகக் கேட்ட போதே ஈரான் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பதில் அளித்த ஈரான் ஜனாதிபதி கடாமி ஈரானைத் தாக்கும் தவறை இஸ்ரேல் செய்யாது என்று தாம் நம்புவதாகவும் அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டால் இஸ்ரேல உடைந்து சிதறக்கூடிய கண்ணாடிக் கூடு என்பதை நிரூபிப்போம் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்(து-9)

## படகு புயலில் சிக்கியதில் 10 மீனவர்கள் பலி?

(சியோல்)
கொரியத் தீபகற்பத்தின் தென் கிழக்குக் கரையோரத்துக்கு அப்பால கடற்பரப்பில் படகொன்று புயலில் சிக்கிக் காணாமல் போயிருக்கிறது.

அதில் பயணம் செய்த 10 மீனவர்களும் உயிரிழந்திருக்கலாமென கரையோரப் பாதுகாப்புக்குப் பொறுப பான உத்தியோகத்தர்கள் அறிவித்துள்ளனர்.

தென்கொரிய, ஜப்பானிய ரோந்துப் படகுகள் பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

ஆனால் இதுவரை கபபலோ மீனவர்களோ கண்டுபிடிக்கப்படவில்லை.

எனினும் உயிர்பாதுகாப்பு கவச உடை ஒன்று சிக்கியதாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கூறினார்.

சீரற்ற காலநிலை மீட்புப் பணிகளைப் பாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-9)

## அரபுநாடுகள் மீது மேற்குலக நாடுகளின் ஆதிக்கம்

### சிரியா குற்றச்சாட்டு

(டமஸ்கஸ்)
பயங்கரவாத நடவடிக்கைகளையும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களையும காரணம் காட்டி அரபு நாடுகளின் உள்ளூர் அரசியலில் தமது ஆதிக்கத்தைச் செலுத்த மேற்குலக நாடுகள் முயற்சித்து வருவதாக சிரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

தலைநகர் டமஸ்கஸில் அண்மையில் நடைபெற்ற எகிப்துடனான பிராந்தியப் பேச்சுவார்த்தைகளின் போது சிரியப் பிரதமர் மாஜியியல் ஒற்றாரி இக் குற்றச்சாட்டினை முன் வைத்துள்ளார்.

"பயங்கரவாத நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி அரபு நாடுகளின் சுதந்திரம் அடக்கப்படுகிறது".

"இதனை வெளிக்காட்டாமல இருப்பதற்காக இஸ்ரேல்-பலஸ்தீன சமாதான முயற்சிகளில் மேற்குலக நாடுகள் தலையிட்டு வருகின்றன என ஒற்றாரி மேலும் தெரிவித்துள்ளா. (து-9)

## சீன இயற்கை வாயுக் கிணறு மூடும் நடவடிக்கை ஒத்திவைப்பு

(பெய்ஜிங்)
கடந்த செவ்வாய்க் கிழமை வெடிப்பு ஏற்பட்ட சீனாவின் தென் மேறகுப் பகுதியில்அமைந்துள்ள இயற்கை வாயுக் கிணற்றை மூடும் நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

நேற்று இடம்பெறவிருந்த நடவடிக்கை இன்று காலை 10 மணிவரை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப படுகின்றது.

மீட்புப் பணிகளுக்கு வழிவகுப பதே இதற்குக் காரணமாகும்.

இயற்கை வாயுப் படிமத்தில் ஏற்பட்ட வெடிப்பின் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை 191 ஆக அதிகரித்துள்ளது.

அதிலிருந்து வெளிப்பட்ட விஷ வாயு காரணமாக கிணற்றைச் சுற்றியுள்ள 25 சதுர கிலோமீற்றர் பிரதேசம நச்சுத்தன்மை வாய்ந்ததாக மாறியிருக் கிறது. (து-9)

## ஈரானின் தென்பகுதியில் பாரிய பூமியதிர்ச்சி பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என அச்சம்

(தெஹ்ரான்)
ஈரானின் தென்கிழக்குப் பகுதியில் கடுமையான பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

ரிச்சர் 6.3 அளவீடுகளில் பதிவு செய்த இயற்கை அனர்த்தம் காரணமாக பலர் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும், எண்ணற்றோர் காயமடைந்திருக்கலாம் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈரானின் ஒரு மாநிலத்திலேயே இந்தப் பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அந்த மாநிலத்தில் பாம் என்ற நகரில் பூமி அதிர்ச்சியால்பல கட்டிடங்கள் இடிந்து விழுந்துள்ளன. இக் கட்டடத்தினுள்ளும் பலர் சிக்கியுள்ளனர்.

உயிருடன் இருப்பவர்களை மீட்பதற்கான பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன என்று மாநில முதல்வர் முஹமட் அலிஹரீம் கூறினார்.(து-9)

## பயணிகள் விமானம் விபத்துக்குள்ளாகியது பெனினில் நூறு பேர் உயிரிழப்பு

(பெய்ரூட்)
பெய்ரூட் நோக்கிப் பறந்து கொண்டிருந்த விமானம் ஒன்று மேற்காபிரிக்காவின் பெனின் மாகாணத்திற்கு அப்பால் கடலில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 100 பேர் வரையில் உயிரிழந்தனர்.

கடற்கரையோரமாக விமானம் அருகே சடலங்கள் ஒதுங்கிக் கிடந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பெனின் மாகாணத் தலைநகர் போர்டோநோவா விமான நிலைய ஓடு பாதையிலிருந்து மேலே கிளம்பியதுமே அருகில் உள்ள கடலில் இந்த விமானம் விழுந்து விபத்துக் குள்ளானது.

இவ் விமானத்தில் 200க்கும் மேற்பட்ட பயணிகள் பிரயாணம் செய தமை குறிப்பிடத்தக்கது. (து-9)



அவுஸ்திரேலியாவின் ஹோபார்ட் நகரில், கிறிஸ்மஸ் தாத்தாவான சான் டா கிளாசிடம் இருந்து பரிசினைப் பெறும் தனது மகளை மகிழ்ச்சியுடன் பார்க்கும் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் சௌரவ் கங்குலி – அவரது மனைவி டோனா.

## தீவிரவாதிகள் பாகிஸ்தானில் தலைமறைவு

(காபூல்)
அல்கெய்டா மற்றும் தலிபான் தீவிரவாதிகள் பாகிஸ்தானில் தலைமறைவாகியுள்ளதாக ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தூதுவர் தெரிவிததுள்ளார்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லைப் புறத்திலுள்ள மலைப் பகுதிகளில் இவர்கள் தலைமறைவாகியுள்ளதாக காபூல் நகரில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடடின் போதே அவர் கூறியுள்ளார். (து-9)



பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப்பை கொலை செய்ய நேற்றுமுன்தினம் அடுத்தடுத்து நடைபெற்ற இரண்டு கொலை முயற்சிகளில் இருந்தும் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார். இந்த தாக்குதல்களில் 14 பேர் உயிரிழந்தனர்.

## அயோத்தி இராமர் கோவில் கட்டுவது குறித்து விஷ்வஹிந்துப் பரிஷத் கூடி ஆராய்ந்துள்ளது

(புதுடில்லி)
இந்தியாவில் இராமர் கோவில் கட்டுவது குறித்தும், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் குறித்தும் விஷ்வஹிந்துப்பரிஷத் விசேடமாகக் கூடி ஆராய்துள்ளது.

நேற்றைய தினம் நடைபெற்ற இந்த விசேடகூட்டத்தில் விஷ்வஹிந்துப் பரிஷத்தைச் சேர்ந்த 30 ற்கும் மேற்பட்ட முக்கியத்துவாகள் கலந்துகொண்டனர் என்று பரிஷத்தின் பேச்சாளர் சரத் சர்மா தெரிவித்துள்ளார்.

அயோத்தியிலுள்ள கர்சேரங்கபுரத தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில இராமர் கோவில் கட்டுவது உட்பட பல முக்கிய விடயங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றன. (து-9)



வத்திக்கானில் உள்ள புகழ்பெற்ற செயிண்ட் பீட்டர்ஸ் பேராலயததில் கிறிஸ்மஸ் தினததை முன்னிட்டு நள்ளிரவு நடைபெற்ற பிரார்ததனையின் போது, குழந்தைகளை ஆசீர்வதிக்கும் போப்பாண்டவர் இரண்டாம் ஜோன் போல்.

## ஜிஹாத் அமைப்பின் தலைவர் இஸ்ரேலின் ஏவுகணைக்குப் பலி

(ஜெருசலேம்)
இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் கட்டளை அதிகாரி ஹெலிகொப்ரரில் இருந்து ஏவப்பட்ட இஸ்ரேலிய இராணுவ ஏவுகணைத் தாக்குதலுக்குப் பலியாகி உள்ளார்.

இஸ்ரேல் இராணுவத்தின் இந்த தாக்குதலால் ம:.பாஷ்ஹமீர் என்ற ஜிஹாத் இயக்க ஆயுதப் பிரிவின் தலைவர் உட்பட 3 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவத்தில் அவரது சகா உட்பட 4 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

ஜிஹாத்தைப் பொறுத்தமட்டில் இது பெரும் பின்னடைவாகும்.

ரெல்லவிவ்வில் பிரதான பஸ் நிலையத்துக்கு அருகே நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்தே இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

பலஸ்தீன விடுதலைக்கான பிரபல முன்னணி என்ற மற்றுமொரு கிளர்ச்சிக்குழு இந்த தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது. (து-9)



பிரதமர் வாஜ்பாயின் பிறந்த நாளையொட்டி அவரைப் பாராட்டி கவிதை எழுதி வாழ்த்துத் தெரிவித்தார் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம். டெல்லியில் உள்ள பிரதமர் வாஜ்பாயின் இல்லத்தில் பூங்கொதது கொடுத்து வாழ்த்தும் கலாம்!

தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்
-குறள் -

# வலம்புரி

## மதவாதப் போருக்கு தென்னிலங்கையில் சதி

இனத்தின் பேரால் நடந்த யுத்தம் மனித உயிர்களைக் காவு கொண்டு உறங்கு நிலையில் இருக்கும் வேளையில் மதவாதப் போரை ஆரம்பிக்க தென்னிலங்கையில் சில தீய சக்திகள் முற்பட்டுள்ளமை இப்போது அம்பலமாகியுள்ளது.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற கொள்கையில் இம்மியும் விட்டு கொடுக்காத தீய சக்திகள் இதுவரை பேசிய இனவாதத்திற்கு அப்பால் இப்போது மதவாதத் தீயை மூட்டி அதில் குளிர்காய முற்பட்டுள்ளன. அண்மையில் அமரத்துவமடைந்த வணக்கத்திற்குரிய கங்கொடவில சோமதேரரின் மரணத்தின் போது விஷமப் பிரசாரங்களைப் பரப்பிவிடும் நோக்கில் தென்னிலங்கையில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் மதவாதத்தைத் தூண்டும் முயற்சியில் தென்னிலங்கையில் உருப் பெற்றுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளது.

ரஷ்யாவில் அமரத்துவமடைந்த சோமதேரரின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் அவரின் மரணத்திற்குப் பின்னணியில் கிறிஸ்தவ மதத்தின் கரங்கள் இருப்பதாகவும் தென்னிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரமானது பௌத்த-கிறிஸ்தவ மதங்களுக்கிடையே ஓர் யுத்தத்தை ஏற்படுத்தி கிறிஸ்தவ தேவாலயங்களை சேதமாக்கும் நோக்குடையதென்பது இப்போது கண்டறியப்பட்டுள்ளது.

இதனை மேலும் உறுதிப்படுத்துவதாக சோமதேரரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற தினத்தில் அங்கு விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் அமைந்துள்ளன.

சோமதேரர் கிறிஸ்தவ மதத்திற்கு எதிரான போக்கையுடையவர் என்பதால் அவரின் மரணத்திலிருந்து கிறிஸ்தவர்களுக்கெதிரான பிரசாரத்தை ஆரம்பிப்பதே உகந்ததென திட்டமிட்ட தீய சக்திகள் அந்தத் திட்டமிடலை அமுல்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் உரிய நேரத்தில் கண்டறியப்பட்டதன் காரணமாக பெரியதோர் வன்முறை தடுக்கப்பட்டுள்ளது.

இருந்தும் இத்தகைய வன்முறைகள் எந்நேரத்திலும் வெடிக்கலாம் என்ற உண்மையை மறந்துவிடுவதற்குமில்லை.

எதுவாயினும் இனவாதத்தால் ஏற்பட்ட அழிவுகளை தாங்க முடியாது நாமும், மக்களும், அவஸ்தைப்படும் போது மதவாத வன்முறையும் வெடிக்குமாக இருந்தால் இலங்கையென்ற நாடு முற்றாக அழிவுறுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# சர்வகாரிய சித்திகளையும் தரவல்ல பெருமையுடைய பிள்ளையார் பெருங்கதை

கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரம் கழிந்த பின்னாளில் ஆரம்பமாவது பிள்ளையார் பெருங்கதை விரதம். அந் நோன்பு மார்கழி மாதத்தில் சப்தமி திதியில் நிறைவுபெறும். திதி கூடுவதைப் பொறுத்து இருபது அல்லது இருபத்தொரு நாள் நோன்பு நீடிக்கும்.

விநாயக சஷ்டி நோன்பு ஆரம்ப, நிறைவில் ஒரு தனியான சிறப்பு உண்டு. கார்த்திகை மாதத்தில் குமாராலய தீபம், திருவண்ணாமலை தீபம் ஏற்றுதலைத தொடர்ந்து நோன்பு ஆரம்பமாகும். பாவை நோன்புத் தொடக்கத்தில் பூரணப்படும்.

விநாயகப் பெருமான் சிவ பெருமானுடைய் மூத்தபிள்ளை அம்மை அப்பர் தம் அடியவருடைய இடரினை விரைவாகக் களையும் பொருட்டு, பிடியதனுருவுமை கொளமிகு கரியது வடிகொடு கணபதி வர அருளினர் என்பது ஞானக்குழந்தை நவிலும் வாக்கு, அது இறைவன் தம்மை வழிபடும் அடியவருக்கு அருளிய மேலான கொடையாகும்.



"தந்தை சொல் மிக்கதோர் மந்திரம் இல்லை" என்பது போலச் சிவபிரானுடைய வாக்குப் பொய்யாகாமல் விநாயகப் பெருமான் தம்மை மனமொழியினால் மெய்வழிபாடு செய்யும் மெய் அடியார்களுடைய துன்பங்களைத் துடைத்து இன்பத்தை ஈவார். தமக்கு மேலான தலைவன் இல்லாதவராதலின் விநாயகர் என்று போற்றப்படுவார். விக்கினங்களை நாசம்பண்ணும் நற்கடவுளாதலின் விக்கினேஸ்வரன் என்று எல்லோராலும் ஏத்தப்டுளவர்.

விநாயகப் பெருமானைச் சிவபிரான் அர்ச்சித்து முப்புரங்களை எரித்தார்.

பஞ்ச பாண்டவர் செய்த விநாயக வழிபாட்டால் துரியோதனாதியரைச் செயம் கொண்டு மீண்டும் தம் அரசியல் பெற்றார்.

உரித்திரக் கடவுள் விநாயகரை உபாசித்ததால் விருத்திராசுரனை வென்று கொன்றிட்டார்.

அகலிகை கணபதியைக் கை தொழுதலால் கணவனை அடைந்தாள்.

தமயந்தி அருள்தரும் விநாயகப்பெருமானை அர்ச்சித்து நளனை அடைந்தாள்.

இராமபிரான் செய்த விநாயக வழிபாட்டால் சீதாதேவியை அடைந்தான்.

பகீரத மன்னன் புரிந்த கணபதி நோன்பால் வரநதி தன்னை வையகத்து வரவழைத்தான்.

அட்ட தேவதைகள் ஆனைமுகக் கடவுளை அர்ச்சித்து அட்ட சித்திகளும் அமிர்தமும் பெற்றார்கள்.

இந்திரன் ஆதியர்கள் ஐங்கரக் கடவுளை அர்ச்சித்துச் சூரன் ஆகியோரால் அடைந்த துன்பங்கள் அகலப் பெற்றார்கள்.

இவ்வாறாக விண்ணுலகத்தவர்களாயினும் சரி மண்ணுலகத்தவர்களாயினும் சரி 'ஆவணிச் சதுர்த்தி நோன்பு, விநாயக சஷ்டி நோன்பு போன்றவற்றை விநாயகப் பெருமானை ஆவாகனம் பண்ணி, சிந்தையில் நினைத்து, தியானம் பண்ணிப் பெற்ற பேறுகள் சொல்லி முடியாது.

விநாயக நோன்பு நோற்றுக் கல்விச் செல்வப் பெரும் பேறு எய்தி இம்மை இன்பத்தையும் மறுமை வீட்டின்பப் பேற்றினையும் பெற முயல்வோமாக.

சந்ததி தழைக்கச் சம்பத்து காரிய சித்தி கைகூட, மேலவர் தம்மை வென்றிட விநாயக நோன்பு நோற்போமாக. □

சிவ சண்முகவடிவேல்

### இந்து கலாசார அமைச்சின்

## செயலமர்வுகள் மூலம் 248 ஆசிரியர்கள் பயன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்காக இந்து சமய கலாசார விவகார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட 3 கட்ட செயலமர்வுகளின் மூலம்248 ஆசிரியர்கள் பயன் பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளின் கீழ் இயங்கிவரும், 100 அறநெறிப் பாடசாலைகளிலும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்காக இச் செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

இதறகமைய உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளின் கீழ் இயங்கிவரும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்க்ளுக்காக கடந்த நவம்பர் மாதம் 1ஆம் 2ஆம் திகதிகளில் யாழ். மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற செயலமர்வுகள் மூலம் 86 ஆசிரியர்களும்,

இம்மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் நல்லை திருஞானசமபந்தர் ஆதீனமண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், வேலணை, சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளின் கீழ் இயங்கிவரும் அறநெறிப் பாடசாலைகளின் 112 ஆசிரியர்களும்,

கடந்த யூலைமாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் கரம்பொன் சண்முகநாதன் வித்தியாலயததில் நடைபெற்ற ஊர்காவற்றுறை, காரைநகர், நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளின் கீழ் இயங்கிவரும் அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்களுககான செயலமர்வில் 50 ஆசிரியர்களும் பயன்பெற்றுள்ளதாக இந்து கலாசார விவகார அலுவலகள் அமைச்சின் யாழ். அலுவலகம் தெரிவித்துள்ளது. (தி-4)

## சதொசவின் சில பிரிவுகள் தனியார் மயமாக்கல்

(கொழும்பு)

சதொச நிறுவனத்தின் நாடளாவிய ரீதியிலுள்ள சில பிரிவுகள் தனியார் மயப்படுத்தப்படவுள்ளன.

சதொச நிறுவனத்தின் சில பிரிவுகளை தனியார் மயப்படுத்துவது தொடர்பாக முன்பு அமைசசரவைக்குச சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைச்சரவை கடந்த செவ்வாய்க்கிழமை அங்கீகாரம் வழங்கியது.

இதன்படி, சதொச நிறுவனத்தின் பாதுகாப்பு, போக்குவரவு, கட்டட உபகரணங்கள், விளையாட்டு உபகரண விற்பனை ஆகிய பிரிவுகள் தனியாருக்கு வழங்கப்படவுள்ளன.

மேற்படி பிரிவுகளைத் தனியார் மயப்படுத்தல் தொடர்பான அமைசசரவையின் அங்கீகாரம் தற்போது கிடைககப்பெற்றுள்ளதை அடுத்து இது தொடர்பான ஆவணங்கள் அமைச்சரவையின் தனியார் மயப்படுத்தல் தொடர்பான உப குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இவ் உப் குழுவின் அறிக்கை பெறப்பட்டதும் இது தொடர்பான விபரங்கள் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(தி-18)

### தினசரி தியானம்

## உயர்ந்த முடிவு

மனிதனுடைய மிக உயர்ந்த முடிவு எது? மனிதனுக்குள்ள ஒரு இலட்சியம் அவனுடைய எல்லாக்காரியங்களிலும் மகிழ்ச்சியை அடையவேண்டும் என்பதை எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கின்றனர். ஆகவே, மனிதனுடைய மிக உயர்ந்த இலட்சியம் நிரந்தரமான ஆனந்தத்தைப் பெறுவதாகத்தான் இருக்க வேண்டும். இது அவருடைய சொந்த ஆத்மனிலேயே பெறக்கூடியதாகும்.

சுவாமி சிவானந்தர்

### சட்டவிரோத வெளிநாட்டு

## முகவர்களை கண்டறிய சர்வதேச பொலிஸ் உதவி

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் வெளிநாட்டு முகவர்களைக் கண்டுபிடிக்க சர்வதேச பொலிசாரின் உதவிகள் பெறப்படவுள்ளன.

சட்டவிரோதமான முறையில் ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் இலங்கைக் குழுவுடன் தொடர்புடையவர்களைக் கண்டறிவதற்காகவே, சர்வதேச பொலிஸாரின் உதவியைப் பெறவுள்ளதாக இரகசியப்பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிலாபத்தில் இருந்து 60 கடல்மைல்தொலைவில் உள்ள ஆழ்கடலில்வைத்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு சென்றுகொண்டிருந்த 260 பேரை கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(து-61,10)

### நடமாடும் சேவைமூலம்

## ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு 7 மில்லியன் ரூபா வருமானம்

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களததினால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஒருநாள் அடையாள அட்டை வழங்கும் சேவைமூலம், இதுவரை 7மில்லியன் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளதாக திணைக்களப் பணிப்பாளர் கே. கே. விஜயரணசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட ஒரே நாளில் அடையாள அட்டைகளை வழங்கும் சேவை மூலம் இதுவரை 14ஆயிரம் தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் பெருமளவானோர் பயனடைந்துள்ளதுடன் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கும் அதிகளவு வருமானம் கிடைத்துள்ளது. இநத இலக்கை அடைவதற்கு திணைக்களத்தின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோரின் திறமையான ஒத்துழைப்பே முக்கிய காரணமாக இருந்துள்ளன.

அத்துடன் இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் இம்மாத நடுப்பகுதி வரை, பெருந்தோட்டத் துறையினருக்கென புதிதாக 9ஆயிரம் அடையாள அட்டைகளும், தொலைநது போய் விண்ணப்பித்தவர்களுக்காக 7லட்சத்து 41ஆயிரம் அடையாள அட்டைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. என ஆட்பதிவுத் திணைக்களப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-18)

### வடக்கு-கிழக்கிலுள்ள

## இந்திய வம்சாவழியினருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை

(கொழும்பு)

இலங்கைப் பிரஜாவுரிமை அற்ற நிலையில் இலங்கையில் வாழ்ந்து வரும் இந்திய வம்சாவழியினரை நிரந்தர இலங்கைப் பிரஜைகளாக்குவதற்கு எடுத்துவரும் நடவடிக்கைகளின அடுத்த கட்டமாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்து வருபவர்களுக்கான பிரஜாவுரிமை விண்ணபபப் படிவங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்புடன் விநியோகிக்கப் படவுள்ளன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற இனக் கலவரங்களால் இடம்பெயர்ந்து சென்று வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்துவரும் இந்திய வம்சாவழித் தமிழ் மக்களை நிரநதர இலங்கைப் பிரஜைகளாக ஆககுவதற்கு உரிய நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப்புலி களின் ஒத்துழைப்புடன் இலஙகைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்னெடுத்து வருகின்றது.

இதற்கான நிரந்தர இலங்கைப் பிரஜாவுரிமை விண்ணப்பப் படிவங்களை விநியோகிக்கும் நடமாடும் சேவை எதிர்வரும் ஜனவரி மாதம் 12ஆம் திகதி முதல் 16ஆம் திகதிவரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு மறறும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் நடாத்தப்படவுள்ளன.(தி-18)

## புளத்சிங்கள பிரதேச செயலர் மீது தாக்குதல்

# சந்தேக நபர்களை ஆஜராகுமாறு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

புளத்சிங்கள பிரதேச செயலாளரை தாக்கியதாக குற்றஞ்சாட்டப்பட்ட ஐ.தே.க.களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் விஜயமானவையும மேல்மாகாண சபை உறுப்பினர் சேனக சமரநாயக்காவையும் ஏனைய 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் ஜனவரி 14 அன்று நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

மத்துகம நீதிபதி மஹிந்த பினிடிய இவ்வழைப்பாணையை பிறப்பித்தார். இச்சந்தேக நபர்கள் அனைவரும் இதற்கு முன்னர் கடந்த 17ந்திகதி நீதிமன்றில் ஆஜராகியபோது பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் அடுத்தவருடம் மே-12ல் மீண்டும் ஆஜராகுமாறு அவர்களுக்கு நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது.

ஆனால் புளத்சிங்கள பொலிஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவர்கள் மீண்டும் ஜனவரி 14ந் திகதி ஆஜராகுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் தெரிவித்த கருத்தின்படி சம்பவநேரம் பிரதேச செயலர் மதுபோதையில் இருந்ததாக தெரிவித்ததற்கிணங்க அவரின் மருத்துவ அறிக்கையை அடுத்த அமர்வின் போது சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றம் பணித்துள்ளது. இதேவேளை பிரதேச செயலாளர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து இதுவரை விசாரணை மேற்கொண்டு வந்த புளத்சிங்களப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ஜி. எச்.விஜயகுணவர்த்தன இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பொலிஸ் அதிகாரி விசாரணைகளை முறையாக நடத்தத்தவறியமையினாலேயே இவர் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் இடம் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

இது இவ்வாறு இருக்க புளத்சிங்களப் பிரதேச செயலாளர் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து தென்னிலங்கையில் உள்ள 308 பிரதேச செயலர்களும் போராட்டம் நடத்தி வருகின்றமை தெரிந்ததே. (தி-60,10)

# தமிழக துணைவேந்தர்களை அமைச்சர் மகேஸ்வரன் சந்திப்பார்

(சென்னை)

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

ஈழத் தமிழ் மாணவர்கள் தமிழ் நாட்டில் உயர் கல்விவாய்ப்புக்களைப் பெறுவதில் உள்ள தடங்கல்கள் பற்றியும் அத்தடங்கல்களை களைவதற்கான வழிவகைகள் குறித்தும் அமைச்சர் கலந்துரையாடுவார்.

இதேவேளை நேற்று முன் தினம் மகாவல்லிபுரம் சிற்பக் கலாசாலைக்குச் சென்ற அமைச்சர் அங்குள்ள சிற்பங்களைப் பார்வையிட்டதுடன் சிற்பாச்சாரியார்களுடனும் கலந்துரையாடினார்.

அத்துடன் ஆலயங்களுக்கு தேவையான பூசைப் பொருட்களை உற்பத்தி செய்யும் பூம்புகார் நிறுவனத்திற்கும் அமைச்சர் விஜயம் செய்தார்.

இலங்கைக்கு பூசைப் பொருட்களை தங்கு தடையின்றி பெற்றுக் கொள்ளும் பொருட்டு மேற்படி நிறுவனத்தின் கிளை ஒன்றை இலங்கையில் நிறுவுவதற்கும் அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். (த)

## எயிட்ஸ் தடை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசியல் துறையினரும் தமிழீழ சுகாதாரப் பிரிவினரும் இணைந்து மேற்கொண்டு வரும் எயிட்ஸ் நோய் எதிர்ப்பு விழிப்புணர்வு செயற்பாட்டில், சிற்றூர்தி உரிமையாளர் சங்கப் பிரிவு 1ற்கான கருத்தரங்கு இன்று மு.ப 10.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் யாழ்ப்பாணக் கோட்ட அதிபர் ஆசிரியர் களுக்கான கருத்தரங்கு காலை 9.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியிலும் நடைபெறும்.

இதேவேளை கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் இன்று காலை 10.00 மணிக்கு எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறும்.

மேற்படி கருத்தரங்கில் சம்பந்தப்பட்ட நிறுவனத்தினதும் திணைக்களங்களினதும் பணியாளர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-6)

## சுகவாழ்க்கை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சுகாதாரக் கல்வி ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன் எழுதிய சுக வாழ்க்கை பாகம்-2 நூல் வெளியீட்டுவிழா இன்று பி.ப 4.30 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி அரசோலை விநாயகர் ஆலயத்தில் இடம் பெறவுள்ளது.

ப.நோ.கூ.சங்கங்களின சமாசத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கவிஞர் சோ.பத்மநாதன் வெளியீட்டுரையையும் பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா நூல் விமர்சன உரையையும் நிகழ்த்துவர். (த)

# ஈரானில் பூகம்பம்....

ஈரான் நேரப்படி நேற்றுக் காலை 7.28 மணியளவில் இப்பாரிய அழிவை ஏற்படுத்திய பூகம்பம் ஏற்பட்டது.

சில நிமிட இடைவேளையில் மூன்று தடவைகள் கெர்மான் மாகாணத்தை பூகம்பம் தாக்கியது. இதன் தாக்கம் ரிக்டர் அளவில் 6.3 ஆகப் பதிவாகியுள்ளது.

முதலில பூகம்பம் ஏற்பட்டபோது. கட்டடங்கள் இடிந்து விழ மக்கள் அலறி அடித்துக் கொண்டு வீதிக்கு ஓடிவந்த அவலக் காட்சியை செய்மதி படங்கள் மூலம் ஈரான் தொலைக் காட்சி நேற்று ஒளிபரப்பியது. மிகப் பாரிய அளவில் மனிதப் பேரவலமாக ஏற்பட்ட இப் பூகம்பத்தால் சில நிமிடங்களிலேயே பத்து ஆயிரத்துக்கும் அதிகமானோர் துடிதுடித்துப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். கட்டடங்கள் இடிந்து வீழ்ந்து பெரும் அவலம் ஏற்பட்டதால் 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் பல ஆயிரக்கணக்கானோர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என்று கெர்மன் மாகாண ஆளுநர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

சுமார் 2000ம் ஆண்டு பழைமை வாய்ந்த வரலாற்றுச்சிறப்புமிக்க கெர்மான் மாகாண பாம்நகரம் முற்றாக அழிவடைந்துள்ளதாக மாகாண ஆளுநர் கவலை வெளியிட்டுள்ளார். மேலும் அந் நகரில் இருந்த இரண்டு பிரதான வைத்தியசாலைகளும் தரைமட்டமாகியுள்ளதால் அங்கு சிகிச்சை பெற்ற நோயாளிகள் மற்றும் வைத்தியர்கள், தாதிகள், அலுவலர்கள் அனைவருமே இறந்திருக்கலாமென்றும் அஞ்சப்படுகின்றது. ஒரே நாளில் மயான பூமியாக மாறியிருக்கும் கெர்மான் மாகாணத்தில் பல பகுதிகளில் மின்சாரம் தொலைத் தொடர்பு முற்றாகப் பாதிக்கப்பட்டிருப்பதால் அங்கு மீட்புப் பணிகளை விரைவாக மேற்கொள்ள முடியாதுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

50ற்கும் மேற்பட்ட மீட்புக் குழுக்கள் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஓயாது ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும் பல மீட்புக் குழுக்கள் நவீன கருவிகளுடன் அங்கு விரைந்துள்ளன. உணவுப் பொட்டலங்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் போர்வைகள் என்பன ஹெலிகொப்ரரில் அப்பகுதிகள் எங்கும் பரவலாகப் போடப்பட்டு வருகின்றன. பெருமளவான சடலங்கள் மீட்கப் பட்டு அப்பகுதியில் உடனடியாகவே அவை எரிக்கப்பட்டதாகவும் தெகிரான் செய்திகள் கூறுகின்றன.

செம்பிறைச் சங்கம் அவசர காலப் பணிமனை ஒன்றை அங்கு நிறுவி நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டுள்ளது. இதேவேளை காயமடைந்தோருக்கு சிகிச்சை அளிகக் பெருமளவான இரத்தம் அவசரமாகத் தேவைப்படுவதாக ஈரான் வைத்தியர்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மீட்புப் பணிகளை விரைவாக்க மோப்ப நாய்களும், நவீன கருவிகளும் நிவாரண உதவிகளும் அவசரமாகத் தேவைப்படுவதாக ஈரான் அதிபர் முகமட் ச்தாமி சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதேவேளை ரஷ்யா, ஜேர்மனி போன்ற நாடுகள் ஈரானுக்கு உதவத் தயார் என்று அறிவித்துள்ளன. ரஷ்யாவில் இருந்து மீட்புப் பணியாளர்களும் நவீன கருவிகளும் நிவாரண உதவிகளும் நேற்றுப் பிற்பகல் விமானம் மூலம் ஈரானுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

உலகையே பெரும் சோகத்தில் ஆழ்த்தியிருக்கும் இவ் இயற்கையின் சீற்றம் 1990ம் ஆண்டு ஈரானைத் தாக்கி 35 ஆயிரம் பேரைப் பலிகொண்டமை இங்கு நினைவுகூரத் தக்கது. (இ)

## ஐ.நா.செயலாளர்...

போட்டியிடும் அறிவிப்புடன் அவரின் திட்டங்கள், ஐ.நாவிற்காக எதிர்காலத்தில் அவர் செயற்படுத்தவிருக்கின்ற நடவடிக்கைகள் பற்றியும் ஆசிய நாட்டுப் பிரதிநிதிகளுக்கு சார்ளி மகேந்திரன் விளக்கிக் கூறினார்.

ஆசிய நாட்டுப் பிரதிநிதிகள் டிரோன் பெர்ணான்டோவின் அறிவிப்பை வரவேற்றுள்ளதுடன் போட்டியிடும் அவரின் அறிவிப்பை தத்தமது நாடுகளுக்குத் தாம் உத்தியோகபூர்வமாக அறிவிப்பதாகவும் உறுதியளித்துள்ளனர். (இ-6)

## கடலுக்குச்....

ளது.இதனையடுத்து தமது உறவுகளைக் காணாததால் குருநகர்ப் பகுதியில் பெரும் சோகமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவம் குறிதது படகு உரிமையாளர் அ.ஞானசேகரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (இ-4)

# பண்ணைக் கடலில்..

வந்துகொண்டிருந்த மினிபஸ்ஸும் யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஐஸ்கிறீம் வானும் பண்ணைப் பாலத்தில் ஒன்றை ஒன்று விலக முற்பட்டபோது,பக்கப்பாட்டாக முட்டுப்பட்டு விபத்துக்குள்ளானதில் மினிபஸ் தடம்புரண்டு கடலில் வீழ்ந்தது.

சம்பவத்தையடுத்து அங்கு வந்த ஊர்காவற்றுறைப் பொலிஸார் வாகனச் சாரதிகள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

இதேவேளை மினிபஸ்ஸுக்கு முன்பாக சீ.ரீ.பி.பஸ் சென்று கொண்டிருந்ததாகவும் அதனை வேகமாக முந்திச் சென்ற மேற்படி மினிபஸ்ஸே விபத்துக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7,3)

தரம் 5 புலமைப்பரிசில் 2004
சுந்தர் வெளியீடு
(பரீட்சை நிலையம்)
எமது நிறுவனத்தில் ஞாயிறு தோறும் மேற்படி நிறுவனப் பரீட்சை நடைபெறும்
வெளிமாணவர் அனுமதியுண்டு
வினாத்தாள் மீட்டலுடன்
முதல் மூவருக்கு பரிசிலும் பத்திரிகைப் பாராட்டும்
பரீட்சை ஆரம்பம்
28.12.2003
ஞாயிறு காலை 9.00மணி
நாவலா
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்

தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள் 2004
❖ பாடசாலைகளுக்கான வெளியீடு
❖ தனியார் கல்வி நிறுவனங்களுக்கான வெளியீடு
❖ தனிப்பட்டவர்களுக்கான வெளியீடு
28.12.2003முதல் நேரடியாக/முகவர் மூலம்/தபால் மூலம்
மொத்தமாகவும் தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்
விபரங்கட்கு சுந்தர் வெளியீடு
844,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் ☎ 021 222 7086

பண்டிகை கால விசேட சலுகை
எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுடன் பேசி மகிழ விசேட சலுகை.
ஒரு நிமிடத்திற்கு கட்டணம் 5/=
அத்துடன் இலவசமாக E.mail மூலம் உங்கள் உறவுகளுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கலாம்.
25.12.2003 தொடக்கம் 01.01.2004 வரை மட்டுமே
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்
T.P: 021 222 2670 Fax:021 222 3214, E.Mail: del-smskr@eureka .lk

மிக விரைவில் எதிர்பாருங்கள்
உங்கள் வலம்புரியில்
வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
எழுதிய
தேச வழமை

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.